# கூளம பூபதி கும்மி

பதிப்பாளர்

**இரா. இராஜகுமாரி**

நெறியாளர்

**முனைவர் வீ. அரசு**

பேராசிரியர் – தலைவர்

**தமிழ் இலக்கியத்துறை**

**சென்னைப் பல்கலைக்கழகம்**

**சென்னை - 600 005.**

**2011**

# சைளம பூபதி கும்மி

*"சுவடியியலும் பதிப்பியலும்"*
*பட்டயப்பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்பெறும் பதிப்பேடு*


*பதிப்பாளர்*

**இரா. இராஜகுமாரி**

நெறியாளர்

முனைவர் **வீ. அரசு**
பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை



**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
சென்னை - 600 005.
**2011**

"சுவடியியலும் பதிப்பியலும்" பட்டயச் சான்றிதழுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு.

எண் : 43011058

**முனைவர் வீ. அரசு**
பேராசிரியர் – தலைவர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **சுவடியியலும் பதிப்பியலும்** பட்டயச் சான்றிதழுக்காக **கூளம பூபதி கும்மி** எனும் தலைப்பிலான சுவடியை **இரா. இராஜகுமாரி** அவர்களால் எனது மேற்பார்வையின் கீழ் பதிப்பித்தார் என்றும், இந்த பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்
**(வீ. அரசு)**

நாள் : – – 2011

இடம் : சென்னை – 5.

**இரா. இராஜகுமாரி**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

# பதிப்பாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **சுவடியியலும் பதிப்பியலும்** எனும் பட்டயச் சான்றிதழுக்காக **கூளம பூபதி கும்மி** எனும் தலைப்பிலான சுவடியை என்னுடைய சொந்த முயற்சியில் பதிப்பிக்கப்பட்டது என்று சான்றளிக்கிறேன்.

**பதிப்பாளர்,**

இரா. இராஜகுமாரி

**(இரா. இராஜகுமாரி)**

நாள் : – – 2011.

இடம் : **சென்னை–5.**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11 |
| நன்றியுரை | 14 |
| கூளம பூபதி கும்மி விளக்கம் | 15 |
| கூளம பூபதி கும்மி பாடல்கள் | 41 |

## பதிப்புரை

மனித மனம் அகத்தில் எழும் உணர்ச்சி உந்தலின் பயனாக வேகமாக எழுச்சியுற்றுப் பலவிதமான புறச்செயல்களைச் செய்து அவ்வுணர்வின் போக்கையும் தன்மையினையும் பிறருக்குப் புலப் படுத்திக் காட்டும் இயல்புடையது. இத்தகைய உணர்ச்சிப் புலப்பாட்டின் ஓர் ஒழுங்கு அமையும்போது அதில்ஒருவகையான இன்பமும் கவர்ச்சியும் ஏற்படுகிறது. அதுவே பலவகையான கலைகளாக உருவெடுத்துக்கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் சுவைபயக்கின்றன. அதனையே நாட்டுப்புற கலைகள் என்று இன்று கூறுவர். இத்தகைய இயல்பான கலைகளை இன்றும் நாட்டுப் புறமக்கள் ஆதரித்துவருகின்றனர். விழாக்களில் இத்தகைய கலைகளுக்குச் சிறப்பான இடம் கொடுத்து வளர்க்கிறார்கள்.

கும்மியடித்துப்பாடும்கலை நாட்டுப்புறத்தின் சிறப்பான இடம் பெற்று தமிழ்நாட்டில் பல ஊர்களின் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அது ஆடல்பாடல் ஆகிய இரு கலைகளும் இணைந்த ஒருகலையாக விளங்குகிறது. நாட்டுப்புற மக்கள் தாங்கள்விரும்பியவாறு பாடல்களைப் புணைந்து வாய்மொழியாகப் பாடி ஆடி மகிழ்ந்திருப்பர். கோயில் விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், குடும்பச்சிறப்புகள், ஆகியவற்றில் கை கொட்டிக் களிப்பதுடன் வாய் மலரப் பாடிமனம் இனிக்ககொண்டாடி இருப்பர். இதுவே கும்மிபாடலின் தோற்றுவாயாக அமைந்திருத்தல் வேண்டும்.

திருந்திய பாடல் அமைப்பிற்குத் தக்கவாறு கைகொட்டி ஆடும் முறையிலும் திருத்தம் ஏற்பட்டு இருக்க வேண்டும். காலம் செல்லச் செல்லப் பாடல்களில் இலக்கிய நயங்களையும் புகுத்த புலவர்கள் விரும்புவது இயல்பு. அவ்வாறு இயற்றிய பாடல்களில் இன்று தமிழில் கும்மிப் பாடல் இலக்கியங்களாகத் தோன்றி இன்று அளவிலும் எண்ணத்திலும் பெருகி காணப்படுகின்றன. பாடல் அமைப்பும் பாடும்முறையும் மாற்றமடைந்துள்ளது.

இன்று கும்மி ஒரு திருந்திய கலையாகச் சிறந்து விளங்காவிட்டாலும் தமிழக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாக நின்று வாழ்கிறது.

**கும்மி சொற்பொருள் விளக்கம்**

பல பெண்கள் இணைந்து இன்ப உணர்வைப் புலப்படுத்தும் பாங்கில் கைகொட்டிக் களித்து பல பொருள் குறித்து வரும் கதைப்பாடல்களைச் சமய சமூக விழாக்களில் சுவை ததும்பப் பாடியும் கலைச்சிறக்க ஆடியும் பிறரை மகிழ்விப்பது கும்மியாகும். இதைக் கும்மியடித்தல், கொம்மி கொட்டுதல் கொப்பி கொட்டுதல் என பல்வேறு முறையில் கூறுவர்.

'கும்மி கசிந்தடி யுங்கோ'

என்று மாடன் கும்மியிலும்

'கும்மி யடியுங்கடி'

என்று இசுலாமியக் கும்மி பாட்டிலும்

'பதம்பாடிக் கொம்மி யடியுங்கடி'

என்று கோயிற் கொம்மி என்னும் ஸ்ரீரங்க கொம்மிப் பாடலிலும்

‘கொட்மி கொட்டுமின்’

என்று குன்றக்குடிக் குமரன் கும்மியிலும் வருவதைக் காணலாம்.

**கும்மி இலக்கிய வகைப்பாடு**

இலக்கிய இனங்களை வகைப்பாடு செய்யும் போது அவற்றின் அகப்புறக் கூறுகளை நன்றாக அறிதல் வேண்டும். நூலின் உள்ளடக்கம் அமைப்பு முறை ஆகியவற்றைத் தெரிதல் தேவை. சூழல், பாடுபொருள், அமைப்புமுறை ஆகியவற்றில் எது வகைப்பாடு செய்ய வாய்ப்பாக உதவுகிறதோ அதனை அடிப்படையாகக் கொண்டு பிரிப்பது சிறப்பாகவும் முறையாகவும் அமையும். அனைத்துக் கும்மிப் பாடல்களையும் சமூகம், சமயம், வரலாறு ஆகிய மூன்றுப் பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம்.

இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள கூளம பூபதி கும்மியானது இம்மூன்று வகைமைகளுள் நாட்டு வரலாற்றைப் பற்றி கூறுகின்றது. அதாவது மதுரை மாவட்ட நிலக்கோட்டைப் பகுதியை ஆட்சிப்புரிந்த நாயக்கர் வம்சாவழியைச் சேர்ந்த கூளப்ப நாயக்கரின் ஆட்சிச்சிறப்பையும் அம்மக்களிடையே நிலவிய நம்பிக்கைச் சார்ந்த கதைப்பாடல்களையும் கூறுகிறது. இக்கும்மியில் உள்ள பாடல்கள் எதையும் தீர்க்கமாக ஆய்ந்து விசாரித்தலே மெய்யாகும் என்பதே இக்கும்மியின் போதனையாக அமைந்துள்ளது.

## நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையால் நடத்தப்பெறும் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயப்படிப்பில் பயில்வதற்கு வாய்ப்பளித்தும் சுவடியோடு நேரடியாக வாசிக்கவும், எழுத்து முறைமைகளை கற்கவும் வழிவகுத்து சுவடியை பதிபிக்கும் முறைமைகளையும் சுவடியைப் பதிப்பிப்பதற்கு வழிகாட்டியாக இருந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் வீ.அரசு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடி வகுப்பில் சுவடியோடுஅணுகவும், எழுதவும் யாப்பு சம்பந்தமான ஐயங்களை தெளிவுபடித்திய உதவி பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களுக்கும், விருந்துநிலை விரிவுரையாளர் சி.இளங்கோ, லதா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாள் சுவடியைப் பதிப்பிப்பதற்கு உரிமை வழங்கிய கீழ்திசை சுவடி நூலக பொறுப்பாளர் திரு.சௌந்திரபாண்டியன் அவர்களுக்கும் நன்றி.

என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரான இராஜேந்திரன், பூங்கோதை அவர்களுக்கும் எனக்கு உதவி புரிந்த அனைத்து நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

# கூளம பூபதி கும்மி

மதுரைமாவட்டம்,நிலக்கோட்டைப் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு அக்குறுநிலப் பகுதியை அரசாண்டு வந்தவர்கள் மாக்கள நாயக்கர்வழியில்வந்த கூளப்பநாயக்கர் வம்சாவளியினராவர், இவ் வம்சத்தினர் இப்பாளையப் பட்டைப் பெற்ற முறைபற்றி 'நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்பநாயக்கன் வமுசாவழி' தெளிவாகத் தெரிவிக்கிறது.

மதுரைப்பகுதியை விசயநகரவேந்தர்கள் ஆண்டு வந்த நேரத்தில், முகம்மதியர்கள் படையெடுத்து வந்தபோது - ஆட்சியை நிலை நிறுத்தவேண்டி விசயநகரவேந்தர், அவைக் களத்தில் சிவப்பு வஸ்திரங்களைக் கொணர்ந்து வைத்து, மனைவியர் மீது ஆசையில்லாதவர்கள் யாரோ அவர்கள் இவ் வஸ்திரங்களை எடுத்துக் கொண்டு போர்க்களம் புகலாம் என்றுரைக் கின்றார்.

அவ்வேளையில் பெஞ்சை வல்லக்கவார் கோத்திரத்தைச் சேர்ந்த மாக்களனாயக்கன் தம் குடிவழியினரை அழைத்துக் கொண்டேகிச் சண்டையிட்டு வெற்றிபெற்று வருகின்றான். வேந்தனும் அவனுக்கு, சிறப்புகள் பலவற்றைச் செய்கின்றனான். (வெள்ளைக் குதிரை, வெள்ளை சுருட்டி, வெள்ளைக் கொடை, வெள்ளைப் பகறடால், வெண்சாமறம் ஆகியன)

இவற்றுடன் நகைகள் சிலவற்றையும், ஆடைகள் சிலவற்றையும் கொடுத்த தோடல்லாமல் தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில், திண்டுக்கல் மதுராபுரிக்கு மேற்கில் முக்காத தூரத்தில் என்றைக்கும் நிலைக்கும் படியாய்க் கோட்டை யொன்றும் போட்டுக் கொள்ளச் சொல்கின்றான்.

அதுகேட்ட மாக்கள நாயக்கன் அப்பகுதிக்குச் சென்று அங்கு மண்கோட்டை யொன்றை எழும்பி அவ்விடத்திற்கு நிலக்கோட்டையென்று பெயருமிட்டு ஆட்சி புரியலானான்.

இவ்வாறு கூளப்பநாயக்கர் வம்சாவளி கலியாண்டு 4467-இல் இருந்து தொடங்குகிறது. நமக்குக் கிடைத்துள்ள வம்சாவளிப் பிரதி இத் தலைமுறையினர் கலியாண்டு 4911வரை 444 ஆண்டுகள் ஆட்சிபுரிந்துள்ளதாகக் கூறுகிறது. இவ்வாட்சிக் காலப்பகுதியில் பட்ட மேற்றபவர்கள் மொத்தம் பதினேழு பேராவர். இவர்களுள் கூளப்பநாயக்கர் என்ற பெயரோடு மட்டும் ஆட்சி புரிந்தவர்கள் ஒன்பதுபேராவர்.

கி.பி.1366 முதற்கொண்டே இவர்கள் ஆளுமைப் பொறுப்பில் இருந்து வந்திருப்பதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. தொடக்காலத் தோற்றாம் பற்றிக் குறிப்பிடும் வம்சாவளிக் கூற்றை ஆய்ந்து பார்க்கும்போது அக்காலப் பாண்டிய நாட்டு நிலைமையையும் நோக்கவேண்டும்.

கிபி.1330 அளவிலேயே பாண்டிய நாட்டில் முகம்மதியரது ஆளுகை தொடங்குகிறது. முகம்மதியரது

ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் சில பாண்டிய வேந்தர்களும் இருந்திருக்கின்றனர். அவர்கள் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி.1314 - 1346) சடையவர்மன் பராக்கிரபாண்டியன் (1315 - 1347) மாறவர்மன் வீரபாண்டியன் (1335 - 1352) ஆகியோராவர் - இவர்கள் எந்தெந்தப் பகுதியில் இருந்து நாட்டை ஆண்டு வந்தனர் என்பது புலப்படவில்லை அயலாரது கொடிய ஆட்சியை, அதன்காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட பெருந்துன்பங்களையும் இவர்கள் போக்க முயன்ரதில்லை

இவற்றைக் கேள்வியுற்ற விசயநகர வேந்தனாகிய குமாரகம்பண்ணன் பெரும்படை திரட்டிக்கொண்டு தமிழ். நாட்டிற்கு வந்து முகம்மதியராட்சியை ஒழிக்கின்றான். இப்படையெழுச்சி கி.பி.1363-ம் ஆண்டிற்கு முன்னார் நிகழ்ந்திருக்க வேண்டும், இப்படையெடுப்பைப் பற்றிக் குறிக்கும் கல்வெட்டுக்களும் தமிழ்நாட்டில் சில ஊர்களில் உள்ளன.

முகம்மதியர்களை வென்ற விசயநகர வேந்தன் எந்தப் பாண்டிய மன்னனி டத்தில் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்துச் சென்றான் என்பது புலப்பட வில்லை.

இதனை நோக்கும் போது, இக்கால கட்டதில் விசயநகர வேந்தர்க்குப் போர்க் களத்தில் ஒரோவழி உதவி புரிந்தவர்கள் மாக்கள நாயக்கர் வழியினர் என்பதும் ஒருவாறு புலனாகிறது பிற்காலப் பகுதியில் வாழ்ந்த பாண்டியர்களுள் பெரும்பாலோர் விசயநகர வேந்தர்கட்குக் கப்பம் செலுத்தி வந்த குறுநிலமன்னர்களாக

இருந்திருக்கின்றனர் இவர்கள் இறுதியில் ஜமீன்தார் நிலையை எய்தித் தென்பாண்டி நாட்டில் ஓர் ஊரில் இருந்து வருவாராயினர்.

இக்காலத்தில் தான் கூளப்பநாயக்கர் வம்சாவளியினரும் நிலக்கோட்டைப் பகுதியை ஆண்டு வந்திருக்கின்றனர்.

இவ்வம்சத்தில், 13-வது பட்டத்தில் இருந்த விறலிவிடுதூது கேட்ட நாகம நாயக்கர் (கிபி.1683-1713) மண்கோட்டையாக இருந்த நிலக்கோட்டையைக் கல் கோட்டையாகக் கட்டுவித்திருக்கின்றார்.

மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கர் திருசுரபுரம் என்ற திருச்சிராப் பள்ளிக்குச் சென்றபோது நிலக்கோட்டைக்கு அருகாகச் சென்றிருக்கின்றார். அவரையும், அவருடன் வந்த ஏனையோரையும் இரண்டாம் பட்டத்தில் இருந்த கூளப்பநாயக்கன் (1378-1403) அழைத்து வந்து விருந்து வைத்து, தன்னால் ஏற்படுத்தப்பட்ட குளங்களையும், கிராமங் களையும் காண்பிக்கின்றான். அதைக்கண்டு மகிழ்ந்த விசுவநாத நாயக்கர், கூளப்ப நாயக்கனுக்கு 'ஒன்பதூர் கூளப்பநாயக்கர்' என்று பேரும் கொடுத்திருக்கின்றார்.

இனி, 'கூளமபூபதி கும்மி' என்றழைக் கப்படும் இக்கும்மிப்பாட்டில் குறிப்பிடப்படும் திருவேங்கிட கூளம் பூபதியும், 'ஒன்பதூர் வேந்தன் மகராசன் நல்ல உத்தமன்' என்று பேசப்படுகின்றான். ஆயின் வச்சாவளி குறிக்கின்ற

பதினேழு பெயர்களுள் இக் கூளம நாயக்கன் பேர் இடம் பெறவில்லை.

எனவே இக் கூளம் நாயக்கன் கி.பி.1810க்குப் பிறகு (கலி.4911), இற்றைக்குச் சிலகாலத்திற்கு முன்பிருந் தவனாதல் வேண்டும். ‘காமய்ய பாலகன்’ என்று கும்மிப்பாட்டு குறிப்பதால் இக்கூளம பூபதியின் தந்தை காமய்ய கூளப்பநாயக்கனாக இருந்த்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

இப்பாட்டை, நிலக்கோட்டைச் சந்தை யூரில் இருந்த சண்முகம் பிள்ளை என்பவர் இயற்ற, அவ்வூரில் இருந்த முத்துக் குமாரபிள்ளை என்பவர் எழுதியதாகச் தன்னைச் ‘ சண்முகதாசன்’ என்றும் அழைத்துக் கொள்கின்றார்.

கும்மியின் முதற்பகுதியினும், இறுதிப் பகுதியினும் சில வரிகளிலேயே திருவேங்கிடக் கூளமபூபதியின் புகழ் பரக்கப் பேசப்பட்டு விடுகிறது.

சீர்கொண்ட பெஞ்சை நகர்க்கதிபன், மேதினி போற்றும் மகராசன், நன்னிலைக் கோட்டைக்கு அதிபதி, ஆதியில் நூலுரை பொய்த்தாலும் மதிஆதவன் நாழிகை ஏய்த்தாலும் மேதினி நீதி வழுவாத திருவேங்கி, கூளம பூபதி, வாகன், மன்மதன், புவிக்கொற்றவன், நீதமனோகரன், செய மாதவன், பூமகள் மேவும் புயராசன், நாவலர் போற்றிய நன்னிதி, செயராமாவதார மகீபதி, காவலர் கப்பம்தபருநிதி, காமய்ய வேளனுள் காதலன், பணமலர்மாலையணி திருவேங்கிட பாக்கிய யோக தயாநிதி, என்றெல்லாம் இக் கூளமபூபதி போற்றாப்படுகின்றான்.

கும்மியைப் பாடத் தொடங்கும் முன்பாக, ௳ ழக்கம் போலக் காப்பு பாடப்படுகிறது. முதலில் விநாயகருக்கும் பின்பு ஈசுவரன், திருமால், நான்முகன் ஆகியோருக்கும், பின்னர் சக்திகாவலன், அங்காளம்மன் ஆகியோருக்கும் இறுதியில் திருச்செந்தூர் கந்தசாமிக்கும் காப்புப்பாடப் படுகிறது.

பத்மினியைப் போன்ற கன்னியொருத்தி இக் கும்மிப்பாட்டை, தன்னிடம் வாது செய்த கூளமபூபதியிடம் கூறுவதாகப் பாடல் அமைந்து காணப்படுகிறது.

எதையும் தீர்க்கமாக ஆய்ந்து விசாரித்தலே மெய்யாகும் என்பதே இக்கும்மியின் போதனையாக வெளிப்படுத்தப் படுகிறது. இதனை வலியுறுத்தும் வகையில் கதையொன்றையும் கூறத் தொடங்குகின்றாள்.

மதுராபுரியில் தென்னன் என்றொரு மன்னன் இருந்தான். அவனிடத்து 'பெரும் சமஷ்த்தானி' என்றொரு மந்திரி இருந்தான். அவனுக்கோ பிள்ளைப்பேறு கிடையாது, அவ்வேக்கத்தால், வெள்ளிவராம் இரண்டு பொழுது உண்ணாமல் சிந்தையில் ஆண்டவனை எண்ணித் தொழுகின்றான்.

இதன் பயனாக அவனுக்கு மக்கள் நால்வர் தோன்றுகின்றனர். அவர்கள் வருமாறு: 1. போதவாதித்தன், 2. சந்திரன், 3. சீதரன்போல வியாகறன், 4.வீடணன், இந்நால்வரும் அகவை பன்னிரண்டுக்குள் தமிழாய்த்து தெளிகின்றனர்.

இவ்வாறு வளர்ந்தவுடன் மக்கள் நால்வரும் தந்தையிடம் போய், பிறவேந்தர் களிடம் சென்று பெருஞ்செல்வம் கொண்ர் வதற்கு ஆணையிடுங்கள் என்று கேட்கின்றனர். அதற்கு அவரோ, மக்கள் சொல்கேட்டு, 'இத்துணையளவு செல்வம் இங்கிருக்க இன்னும் தேடும் செல்வம் பெரிதோ' என்று கூறுகின்றான்.

உடனே மக்கள் நால்வரும், 'பொருளுக்காக மட்டுமல்ல.... சொல்லுக்கு வளனாவன் சொன்னைதையும் தேடிவரு கின்றோம்' என்று மறுமொழி பகர்கின்றனர், அதுகேட்டுத் தந்தை மகிழ்ந்து, சென்றுவரும்படி விடைகொடுக்கின்றான்.

இங்ஙனம் விடைபெற்ற நால்வரும் ஐந்து காததூரம் நடந்ததுமே போகின்ற வழியில் ஒரு எடத்தைப் பார்க்கின்றனர். உடனே முன்னவன், அத் தடத்தை கண்டு, முடமான ஒட்டகம் ஒன்று போயிருப்பதை பாருங்கள் என்று கூறுகின்றான். பின்னவன், அந்த ஓட்டகம் சூழ்தரித்தது என்று தெரிவிக்கின்றான் மூன்றாமவன் 'அது குட்டையானது' என்கின்றான். இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் ஒட்டகத்திற்குச் சொந்தக்காரன் சம்புமர நிழலிலிருந்து ஓடிவந்து, 'என்னுடைய ஒட்டகம் எங்கே? என்று கேட்கின்றான். ஒட்டகத்தைப் பார்க்கவில்லை கால் தடத்தை வைத்துச் சொன்னோம்' என்று அவர்கள்கூற, 'ஒட்டகத்தைப் பார்க்கவில்லை என்று கூறும் நீங்கள் அதன் அடையாத்தைச் சரியாகச் சொன்னீர்களே இது எங்ஙனம்

சாலும்? நீங்கள் கடத்திவைத்திருக்கிறீர்கள் அதைக் கொடுக்காவிட்டால் உங்களை விடமாட்டேன்' என்று கூறி அவர்களை அழகாபுரி வேந்தனிடம் அழைத்துச் சென்று முறையிடுகின்றான்.

ஒட்டகத்துக்குரியவனின் முறையீட்டைக் கேட்ட வேந்தன் நால்வரிடமும், 'ஒட்டகத்தைப் பார்க்காமல் அதன் அங்க அடையாளங்களை எவ்விதம் சரியாகச் சொன்னீர்கள்? சொல்லுங்கள்' என்று கேட்கின்றான்.

உடனே அவர்கள் ஒவ்வொருவரும், 'சென்றதன் சாயல் ஒருபக்கமாக இருந்ததால் அதுபொட்டை யென்றேன்; அதன் பாதங்கள் நிலத்தில் பதிந்திருக்கும் விதம்பார்த்து அது சூல் கொண்ட தென்றேன்; நான்கு கால்களும் சரியாகப் பதியாததால் ஒருகால் முடமென்றேன்; கீழே விழுந்ததனால் அதுகொண்டு குட்டையென்றேன்' என்று கூறிமுடிக்கின்றனர்.

இதுகேட்ட வேந்தன் மனம் மிக மகிழ்ந்து அந்நால்வரையும் நோக்கி, 'நீங்கள் என்னிடம் வேலைக்கமர்ந்தால் சம்பளம் தருகிறேன்' என்று கூருகின்றான். அவர்களும், மாதம் ஒன்றுக்கு ஆயிரம் பொன் சம்பளமாகக் கொடுத்தால் தங்குகிறோமென, வேந்தனும் உடன் படுகின்றான்.

அவ்வாறே அவர்கள் நால்வரும் சாமங்களை நான்காகப் பிரித்துக் கொண்டு அழகாபுரி நாட்டைக் காவல் காத்து வருகின்றனர்.

அவ்வாறு காவல்காத்து வரும்போது ஒருநாள் மூத்தவன் நகர்காத்து வரும்போது வடக்குத் திக்கில் பெண்ணொருத்தி ஏங்கியழுவதைக் காண்கின்றான். இந்த நிசி வேளையிலே அழுகையொலி வருகிறதே-யார் அது என்று போத வாதித்தன் சென்றுபார்க்க, ஆங்கே தேவி பத்திர காளியம்மன் ஏக்கமாய் வாய் விட்டுழுதைக் கண்டனன். 'தாயே! ஏன் ஆங்காரமாய் அழுதேங்குகிறாய்? சொல் உத்தமியே' என்று தாள் பணிந்து வேண்டுகின்றான்.

தன்னிடத்து வந்து தன்தாள் பணிந்த அமைச்சனை நோக்கி தேவி, 'யார் நீ' என்று கேட்க அவனும் 'அரசனிடத்துப் பணிபுரியும் மந்திரி தாயே' என்கின்றான். இவ்வாறு அவன் கூறவும், சொல்கிறேன் கேள்; தீ வினையை நீ வெல்வாயா? வேந்தனை சூடிவரும் துன்பத்தைக் களைவாயா? அவ்வாறு நீ காத்து நின்றால் இவ்வுலகில் பெரும்புகழைப் பெற்றிடுவாய் என்கின்றாள் தேவி.

அது கேட்ட அமைச்சன் போதவாதித்தன், 'அன்னையே என்னால் ஆவதுண்டோ? வரும் ஆபத்தைக் காப்பது நின் செயல்தான்' என்று கூறி தீவினைகள் எங்ஙனம் சூழும் என்று கேட்கின்றான். தேவியும் 'இந்த பூமியை ஆள்கின்ற வேந்தன் பக்கம் மூன்று தீவினைகளும் சேர்ந்து ஒருநாளில் சூழப் போகிறது' என்கிறாள்.

இன்னும் கேள்!

1. ஆதிவாரம் விடிகாலையில் வேந்தனின் பகைவன் வேந்தன்பால் பெட்டியொன்றை விடுப்பான் அந்தப் பெட்டியை வேந்தன் திறந்துவிடாமல் பாதுகாப்பாயாக.

2. அன்று இரவு அரசன் உண்ணும் உணவில் நஞ்சு கலக்கப்படிருக்கும், இவ்வுணவை அரசன் உண்டுவிடாமல் பாதுகாப்பாயாக.

3. அன்று அரசனும் தேவியும் துயில்கின்ற போது அரவமொன்று அங்கு வந்து அரசனைத் தீண்டவுமுள்ளது.

இந்த மூன்று தீவினைகளையும் வென்றால் அச்சமில்லை நீ சென்று காத்துக்கொள் என்று காளி கூற அமைச்சனும், நீயும் வந்து என்முன்நின்று உதவி செய்து நாளைக்கு அரசனைக் காக்கவேண்டும். நல்ல பதில் கொடுதாயே என்று கேட்க, தேவியும், 'முன்னின்று காப்போம்' என்று கூறுகின்றாள்.

காளியின் பதிலுரை கேட்ட அமைச்சன் பின்னர் நகர்க்கேகி அரசனிடம் சென்று அடிபணிந்து நிற்கும் போது, மச்சதேசத்தில் இருந்து சித்திரப்பெட்டி யொன்று அரசன் முன் சிலர் கொண்டுவர, அரசன் அதுகண்டு மகிழ்ந்து ஏதிந்தப் பெட்டி என்று வினவ, வந்தவர்கள் மச்சராசன் விடுகின்ற கப்பம் என்று சொல்லிக் கைதொழுகின்றனர். இதுகேட்ட வேந்தன் மனம் மகிழ்ந்து பொட்டியைத்திறக்க முற்படும்போது, போதவாதித்தன் 'அரசே! இப்போது ராகுகாலம்; பின்னர்திறக்கலாம் என்று கூறிப் பெட்டியைத் திறக்கவிடாமல் பார்த்துக் கொள்கின்றான்.

அரசனும் சிந்தை மகிழ்ந்து, அனிஷ்டான வந்தனைகள் செய்து கொண்டு, உண்பதற்கு அமுதுகொணர்க' என்று கேட்கின்றான். பொற்றாளத்தில் கொண்டுவந்து கொடுத்த அமுதை அரசன் தன் கைகளால்

அளைந்து கொண்டிருக்கும்போது கூப்பிய கைகளை விரித்து, 'அரசே அன்னம் எனக்கு ஒரு மூன்று பிடிவேண்டும்' என்று அமைச்சன் வேண்ட அரசனும் அமுதுகொடுக்க அமுது தீர்ந்துவிடுகின்றது. இதிலும் அரசன் காப்பாற்றப்படுகின்றான்.

பின்னர் அரசன் தன்தேவியோடு துயில்கின்ற போது அமைச்சனும் அங்கு சென்று தன்னுடைய வச்சிர வாளையுருவிக் கொண்டு காவல் காத்து நிற்கின்றான். அந் நேரத்தில் உரகம் ஒன்று சீறிவருவதைக் கண்டவுடன் தன் வாளை அதன்மீது வீசிட பாம்பும் இரண்டுதுண்டாகியது.

வாளில்பட்ட இரத்தத் துளியை உதறும் போது அதில் சிலதுளிகள் அரசனது தேவியின் மார்பில் பட்டு விட, அந்தத் துளிகளைச் சுண்டுவிரலால் சுண்டி எடுக்கின்றான், அந்த நேரத்தில் தன்மீது பிறன் கை வைத்திருப்பது கண்டு திடுக்கிட்டெழுகின்ற தேவி யார் என்று வினவ, அமைச்சனும் 'போதவாதித்தன்' என்று கூறிவிட்டு மனைக்குச் சென்று விடுகின்றான்.

உடனே தேவி தன்னுடைய மன்னவனைத் தட்டி எழுப்பி, உங்களுடைய மந்திரயருள் மூத்தவன் செய்த ஊக்கமதைப் பாருங்கள் நான் உறங்குகின்ற நேரத்தில் அவன்தன்னுடைய நகத்தால் என் மார்பங்களை நத்திச் சுரண்டி சகிக்கனைகள் செய்ததோடு நில்லாமல் தன் பேரையும் சொல்லி கொண்டே போகின்றான்' என்று விம்மி, மனம் உருகி, ஏங்கிக் கண்ணீர் சொரிந்தாள். நன்று நன்று; இப்படிப்பட்ட அமைச்சனை நீர் தேடியதும் நியாயமோ வென்றாள்.

போத சந்திரன்:

அந்த நேரத்தில் போதசந்திரன் அளகாபுரி நகரைச் சுற்றிப்பார்த்துவிட்டு அரசனுடைய அரண்மனைக்கும் வருகின்றான். அரசன் யாரென்று கேட்க, 'அரசே! போதசந்திரன்!' என்று சொல்கின்றான். இது கேட்டவுடன் வேந்தன் கோபம் கொண்டு, உன்னுடைய தமையின் போதவாதித்தன் நாங்கள் உறங்குகின்ற நேரத்தில் என்னுடைய தேவியைச் சுகிக்கினைகள் செய்துபோய் விட்டான். இது நியாயமா? என்று கேட்கின்றான்.

அதுகேட்ட போதசந்திரன் மிகவும் நடுங்கி, முந்தையுள்ளோர் செய்த தீவினை இப்போது மூண்டதோ என்று எண்ணி, அரசே! நீதியினால் விசாரனை செய்வது நிச்சமற்றது. பொய்யாகும் என்று கூறி ஆதியில் நிகழ்ந்த கதையொன்றைக் கூறுகின்றேன்; கேளுங்கள் என்று உரைக்கின்றான்:

விசயநகரம் என்ற ஒரு பட்டணத்தில் மதியாழி காரியக் காரனும், சக்கரயுத்தியும் காசினியை ஆண்டு வரும்போது அந்நகரில் வாசுதேவன் என்பான் புத்திரபாக்கிய மில்லாததால் தத்தை ஒன்றை மனையாளுடன் குழந்தைக்கு ஒப்பாக வளர்ந்து வருகின்றான். அவ்வாறு வளர்ந்து வரும்போது ஒருநாள் அந்தக்கிளி, தன்னுடைய இனங்கள் வானத்தில் பறந்து செல்வதைக் கண்டு ஆனந்தமுற்றுக் கூவி அழைத்து, பந்துக்களே! நானும் உங்களுடன் வருகின்றேன் என்றுகூற, அதுகேட்ட கிளியினங்கள், 'வடக்கிலே உள்ள சந்திரகிரி

மலையில் கந்துகம் போன்ற ஒருகனி உண்டு. அங்கு மானிடர்கள் செல்லக்கூடாது, அங்குள்ள வனத்துக் கனியை உண்பவர்கள், நூறுவயதானவர்களாக இருந்தாலும் பதினாறு வயது வாலிபப்பருவத்தை அடைந்து விடுவார்கள் என்று கூற அதுகேட்ட மறையவன் வளர்த்த கிளி வேதியனிடம் சென்று இதைக்கூற, அவனும், 'அப்படிப்பட்ட கனியைக்கொணர்க' என்று கூற கிளியும் சந்திரகிரி சென்று அந்த சூதகக் கனியைப் பறித்துக் கொண்டு வந்து மறையவணிடம் கொடுத்தும்.

கிளிகொடுத்த கனியைப்பெற்று மறையவன் அதனை நிலத்தில் ஊன்றி வளரச் செய்தான். அதுவும் வளர்ந்து மலரும், பிஞ்சும், காயுமாகச் சொரிய, மறையவன், அதனை மிகவும் கவனமுடன் பாதுகாத்து வந்தான். இந்நிலையில் முதலில் பழுக்கும். கனியினை வேந்தர்க்கு அளித்துப் புசிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்தணன் இருக்கும்போது, பாம்பொன்று அம்மரத்தின் மீதேறி பழுத்துக்கிடந்த கனியினை விட முள்ளாதாக்கியது.

இதனையறியாத மறையவன் அக்கனியைப் பறித்துக் கொண்டு சென்று மன்னனிடத்தில், அக்கனியின் அருமை பற்றிக் கூற, நாடாளும் மன்னவனும் அதிசயித்து, தன்னுடைய குருக்களை அழைத்து அக்கனியை உண்ணுமாறு கூறினன். குருக்களும் அக்கனியை உண்ண, உடனே கீழே விழுந்து உயிர் துறந்தார். இதைக்கண்ட மன்னன் மனக் கலக்கமுற்று, அந்தணனை வதைக்கவேண்டும் என்று எண்ணி பச்சைக் கற்பூரத்தை அவன் கண்ணிலே கட்டுவிக்கும்படி ஆணையிட

மறையவனும் விழிகளை இழந்தான் தன் வழிபோக்க காரணமாக இருந்த தத்தையின் கழுத்தையும் திருகிப் பாழுங் குழிக்குள் எறிந்தான் அவன்

வேதியன் வளர்த்துவந்த மாமரத்தை நச்சுமரம் என்று கருதிய வேந்தன் அம்மரத்தைச் சுற்றிலும் முட்களைப் போட்டு மூடி காவல்செய்தான். இப்படியிருக்கும்போது ஒருநாள், அந்நகரில் இருந்த ஒரு செட்டிப்பெண் தன்னுடைய மாமியாரை கொடுமைப் படுத்தவே அக்கொடுமையில் இருந்து மீட்சிபெற, கிழிவி மனம் வெறுத்து தன்னுடைய உயிரைப்போக்கிக் கொள்ள அரசனால் நச்சுமரமென அடையாளஞ் சுட்டப் பட்ட மரமிருக்கும் இடத்திற்கு இருட்டு வேளையில் சென்றாள். காவல் இல்லாத நேரம் பார்த்து அம் மரத்திலிருந்து கனியொன்றையும் பறித்துச் சாப்பிட்டாள். சாப்பிட்டவுடன் அக் கிழவி பருவம் நிறைந்த மங்கையாக சீப்பிட்ட கூந்தலும், பந்து போன்ற கொங்கைத் திரட்சியும் கொண்டு தோற்றமெடுத்தனள்,

வீட்டில் தாயைக் காணாதது கண்ட தனயனும் அவன் மனைவியும் அவளைத்தேடி, மரத்தருகே இளமைத் தோற்றமுடன் நின்று கொண்டிருந்த தாயிடம் சென்று இங்கு வயது முதிர்ந்த பெண்ணொருத்தி சென்றதைக் கண்டீரோ என்று கேட்க, அவளும் வெட்கம் மிகவுற்று, ‘அப்படி யாரையும் பார்க்கவில்லை நான் தான் உன்தாய்’ என்றாள். அதுகேட்ட தம்பதியர் இருவரும் பேய்தான் இப்படி நம்மை ஏய்க்கின்றது என்று எண்ணி ஓட்டம் பிடுக்க, தாயானவளும் தொடர்ந்து ஓட அது கண்ட செட்டி வீதியில்

நின்று புலம்ப, அதுகேட்ட ஊர்மக்கள், உனக்கு இந்தக் கோலம் வந்தது எப்படி என்று வினவ வாலிபப் பெண்ணாக இருந்த செட்டிக்கிழவியும் தனக்குநேர்ந்ததைக் கூறினாள். இதைக் கேட்ட மக்கள் அரசனிடத்துச் சென்று இச் செய்தியினைக் கூற அரசன் மீண்டும் அதிசயப்பட்டு இன்னொரு மாங்கனியைக் கொணர்கவென்று ஆணை பிறப்பிக்க, அவ்வாறு மாங்கனி வந்தவுடன் தம்மருகே இருந்த விருத்தன் ஒருவனிடத்து அதனை அளித்து உண்ணுமாறு கூற உடனே அவனும் அதனை உண்டு மன்மதனுக்கொப்பாக வடிவம் பெற்றனன். இது கண்ட வேந்தன், முன்பு வேதியன் கொணர்ந்த கனியில் முன்வினை சிறந்திருந்ததோ அல்லது என்னை சூழ வந்த பாவம் அன்று நீங்கினதோ என்று ஏங்கி, வேதியனை அழைத்து வந்து, எதையும், தீர ஆராயாமல் அநியாயமாக உன் கண்களைக் குருடாக்கி விட்டேன். எனவே அதற்கு ஈடாக இந்த நகரில் பாதியை நீ ஆள்வாயாக எனக் கூறி தாரை வார்த்துக் கொடுத்து விட்டு காசியாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்றான். வேதியனும், நாமும் அநியாயமாகத் தத்தையைக் கொன்று விட்டோமே என்று மனம் கலங்கி அதனால் பைத்தியம் பிடித்து அலைந்து மடிந்தான்.

நாடு முழுவதும் அரசன் அநியாயம் செய்து விட்டான் என்ற பேரே நிலைத்தது. எனவே, அரசே! எதையும் தீர விசாரிப்பதே மெய்யாகும் என்று போத சந்திரன் கூற, அவ் விடத்திற்குப் போதவியாகரனும் வந்து சேர்ந்தான்.

போதவியாகரன்:

அரண்மனை வந்தடைந்த போதவி யாகரனிடம், உன் தமையன் என் காதலியின் கொங்கை மீது நகத்தைப் பதித்துச் சென்றான், இது நியாயம? என வேந்தன் கேட்க அவனும் பூமியில் நடந்த கதையொறைக் கூறத் தொடங்கினான்.

மயிலாபுரி என்னும் நகரை சேமன் என்ற அமைச்சனுடன் சேர்ந்து விராசனும், போசனும் ஆட்சி புரிந்து வந்தனர். அந்த நகரில் திருவம்பலவன் என்ற வேடன் ஒருவன் தனக்குப் பிள்ளையெதுவும் இல்லாததால் முடுவலின் குட்டியொன்றைப் பிள்ளையைப் போல் பேணி வளர்த்து வந்தான். அதுவும் பெரிதாக வளர்ந்து அறிவு மிகப் பெற்று வரும் நாளையில், வேடன் தான் பெற்ற கடனுக்காக நாயைச் செட்டியிடம் கொண்டு சென்று நானூறு பொன்னுக்கு அடகு வைத்தனன். வைசியனும் பட்டணம் சுற்றக் கப்பலிலே செல்லக் கருதியமையால் தம் வீட்டுக்கு அதனைக் காவல் வைத்துச் சென்றனன்.

நாய் காவலிருக்கும் போது செட்டியின் மனைவியுடன் கள்ளக்காதலன் ஒருவன் இரவுவந்து படுத்த விடிகாலை வேலையில் எழுந்து செல்வதைக்கண்டு மிகச்சீற்றமுடன் குலைத்து, பின்னும் அங்கு சேரவரும் சோரர்களைத் துரத்தியடித்தது. தம் இன்பவாழ்வுக்கு இடையூறாக இருக்கும் அதனை அந்தச் செட்டிப் பெண்ணும் துரத்தி அடித்தாள். ஆனாலும் அந்நாய், சோரன் ஒருவன் அவளுடன் படிக்கும் போது அவனைக் கடித்துக்

கண்டம் துண்ட மாக்கியது. செட்டிப் பெண்ணோ மிகவும் நடுக்கமுற்று தன் வீட்டில் இருக்கும் பிணத்தைக் கொல்லயில் கொண்டு சென்று புதைத்து விட்டு, குக்கலுக்கு அன்னமிடாமல் விரட்டியத்தாள். ஆனால் சூரன் எனப்பட்ட அந்நாய் அந்நகரில் பிறர் கையளைந்துவிழுந்த எச்சில் சோற்றை உண்டு செட்டியின் வீட்டைக் காவல் காத்து வந்தது. இப்படியிருக்கும்போது பட்டணம்சுற்றச் சென்ற செட்டியும் மனைக்குத் திரும்பி வந்தனன்.

வணிகளைக் கண்ட நாயும் வாலையாட்டி, முன் கால்களை வளைத்து, அமர்ந்து எழுந்து, பின்னர் கைகளை முகர்ந்து கூத்தாடி ஊளைக் குரவம் விட்டது. தன்னைக் கொஞ்சிய ஞமலியைக் கண்ட செட்டியும் மகிழ்வுற்றுத் தம் செங்கையினால் தடவிவிட, வீட்டில் நடந்த வஞ்சகத்தைச் செட்டி அறிய வேண்டுமென்ற எண்ணத்துடன் கொல்லைக்குச் சென்று மண்ணைப் பறித்தது. செட்டியும் கூடச் சேர்ந்து மண்ணைத் தோண்டவே அங்கு புணமொன்று இருப்பதைக் கண்டு கூக்குரலிட்டனன்.

செட்டியின் கூக்குரல் கேட்டு ஊர்மக்கள் அங்கு கூட, கூடியவர்கள் அவன் சோரன் என்று கூற, செட்டிப் பெண்ணும் அதை ஒத்துக் கொண்டனள். பின்னர் நடந்ததை ராசனிடம் சென்று கூற, சுண்ணாம்புக் காளவாயிலில் வைத்து நீத்தலிடும்படி அரசன் ஆணை யிட்டான். செட்டியும் நாயை அனைத்து முத்தமிட்டு மகிழ்ந்தனன். இனி, வேடன் உன்னை வைத்து என்னிடத்து வாங்கிய பொன் எனக்குத் தேவையில்லை எனக் கூறி முரியைத் தேடியெடுத்து வேடனிடம் செல்லும்படிக் கூறினான்.

நாயும் வேடனை நோக்கிச் செல்லும் போது, எதிரே வேடன், செட்டியிடம் கொடுக்கவேண்டிய பணத்துடன் வருவதைக் கண்டது. வேடனோ நாயைக் கண்டு கோபமுற்று, 'பெற்ற கடனைத்தீர்ப்பதற்கு முன்பாகவே ஓடி வந்தாயோ? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தாயோ?' என்று கையிலிருந்து அரிவானால் நாயின் கழுத்தை இரு துண்டாக வெட்டி வீழ்த்திச் செட்டியுடம் சென்றான்.

வேடனைக் கண்ட செட்டியோ, 'உன் நாயை உன்னிடத்து அனுப்பிவிட்டேனே. நீ காணவில்லையா?' எனக் கேட்க, வேடன் மலைத்து, 'பொருள் கொள்ளாமல் ஏக விட்டதேன்?' என்று வினவ செட்டியும் மனம் மகிழ்ந்து நடத்தைக் கூறினான். அது கேட்ட வேடன் அக்கணமே மடிந்து விழுந்தான் கூடவே செட்டியும் உயிர் துறந்தான்.

எனவே எதையும் தீர்க்கமாக விசாரணை செய்த பின்பே உண்மை தெரியும் என்று போத வியாக்ரன் கூறிச் செல்கின்றான்.

போதவிபீடணன்:

அவன் சென்றவுடன் போதவிபீடணன் அவ்விடத்திற்கு வருகின்றான். அவனிடமும் அரசன், 'உன் தமையன் பங்கம் செய்தான்' என்று கூற அதுகேட்ட விபீடணன், 'ராமா! ராமா!' எனக்கூறி காதில் கையை வைத்துப் பொத்தி முன்னர் நடந்த கதையொன்றைக் கேட்பாயாக எனக்கூறி மொழியலுற்றான்.

மகேந்திர மண்டலம் என்ற நாட்டை, சித்திரரூபன் என்ற மந்திரியும் தளசிங்கம் என்ற வேந்தனும் ஆண்டு வரும்போது, அந்நாட்டில் ஒரு வாணியமங்கை கீரிப்பிள்ளையொன்றை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தாள்.

கீரிப்பிள்ளையை வளர்த்த காரணத்தால் அவ்வாணிய மங்கையும் கர்ப்பம் தரித்து, ஆண் பிள்ளையொன்றையும் பெற்று நேர்மையாக வளர்ந்து வந்தாள். ஒருநாள் தொட்டியில் குழந்தையைப் போட்டு, கீரியைக்காவல் வைத்துவிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சென்றாள்.

கீரி, குழந்தையைக் காவல் காத்து வரும்போது கட்செவியொன்று தொட்டியை நோக்கி வேகமாகச் சீறிவர கீரியும் அதனைக் கடித்துத் துண்டாக்கியது, பாம்பு மடிந்துவிட்ட செய்தியைத் தாயிடம் கூற வேண்டுமென்று கீரி எதிர்செல்ல, கீரியின் வாயில் ரத்தம் இருப்பது கண்டு, கீரி குழந்தையைக் கடித்தது என்று எண்ணி கோப முற்று தண்ணீர்க் குடத்தைக் கீரியின் தலைமீது போட்டு நசுக்கினாள்.

பின், கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று தொட்டியைப் பார்த்தாள், அங்கு குழந்தை உறங்கிக் கொண்டிருக்க, அருகே அரவமொன்று துண்டாகிக் கிடந்ததைக் கண்டாள், வாணிய மங்கையும் முட்டிமோதித் தன் உயிரை மடித்தனள். பெற்ற தாயே குழந்தையை விட்டு மாய்ந்த பின்னர் வாணியன்

தன்குழந்தையைப் பாலுள்ள மங்கை யொருத்தியின்பால் சேர்த்துவிட்டுத் தானும் பித்துப் பிடித்து மடிந்தனன்.

தீர்க்க விசாரித்தால் இப்படிப்பட்ட சேதங்கள் நிகழ்வுறா என்று கூறிவிட்டு விபீடணனும் தன் மனைக்குச் சென்றனன்.

### அரசவை கூடியது

பொழுதும் புலர்ந்தது. மகுடாபதிபனும், போத வாதித்தன் அவன் தம்பியர் மற்றும் புகழ்புரிந்தோர் அனைவரையும் அழைத்து அவையினரை நோக்கிக் பேசத் தொடங்கினான்.

போதவாதித்தன் இரவில் செய்த செயலினை அவையோரே நீங்களே கேளுங்கள் எனக்கூறி முடித்தான். அவையோரும், 'போதவாதித்தனே! ஏன் இப்படி?' என்று வினவ அவர்களை நோக்கிப் போதவாதித்தனும் பேசத் தொடங்கினான்.

### போதவாதித்தன்

வாருதிக்கு அப்புறமோர் தீவொன்று உள்ளது. அங்கு வனமொன்றும் உண்டு. அவ்வனத்தில் இருந்த மாமரத்தில் பறவையொன்று சித்திரம்போலே ஒரு கூடு செய்து முட்டையிட்டு இரு குஞ்சும் பொறிந்தது. கூடு கண்டு சென்ற ஒரு பாம்பு பறையில்லாத வேளையில் அக்குஞ்சுகளை விழுங்கியது. இப்படி மூன்று முறை குஞ்சுகளை, பாம்பு விழுங்கியபோதும் பறவைமீண்டும் ஒரு முட்டையிட்டு குஞ்சொன்றை வளர்த்து வந்தது

ஒருநாள் குஞ்சு உறங்கிக் கொண்டிருக்கும் போது தாய்பறை, இரைதேடிச் செல்லும் பொருட்டு, குஞ்சை எழுப்பாமல் தான் மட்டும் சென்றது. உறங்கிக் கொண்டிருந்த குஞ்சின் கூட்டில் குச்சியொன்று முடிந்துவிழ குஞ்சின் உறக்கமும் களைந்தது. குச்சியினால் நமக்கு ஒச்சமன்றோ வந்திருக்கும்! தாய் நம்மை எழுப்பிச் செல்லலாகாதோ என மனத்தில் எண்ணி மரக்கொம்பினில் ஏறியது. அப்போது மூன்று தீவினைகளும் அதனை நோக்கி வருவது அதற்குத் தெரியாது.

வேடனொருவன் மரத்தில் குஞ்சைக் கண்டு கணையைத் தொடுத்து, மரத்தடிவந்து நின்றான். அந்நேரத்தில் புற்றிலுருந்து நாகம் குஞ்சு விழுங்க வெளிவந்தது. வானத்திலோ ராசாளிப் பறவை ஒன்று குஞ்சையடிப்பதற்காக வட்டமிட்டது. இப்படி மூன்று வினைகளும் அங்கு ஒன்று சேர்ந்தன.

குஞ்சை வீழ்த்த வேண்டும் என்று வேடன் அண்ணாந்து பார்த்தவாறு சுற்றுகையில் புற்றை விட்டேகிய பாம்பின் கழுத்தில் காலால் மிதிக்க, பாம்பும் அவன் காலில் மாலையைப் போல் சுற்றிக்கொள்ள வேடனும் புரண்டு குதித்தனன், அதன் காரணமாகப் பாம்பின் தலை மிதிபட அது இறந்தது.

வானத்தில் வட்டமிட்ட ராசாளிப் பறவையின் மீது, வேடன் குஞ்சுக்கு வைத்திருந்த அம்பு சுருண்டு சென்று பட அதுவும் மாண்டது பாம்பு கடித்த விஷத்தாலே வேடனும் மாண்டு போனான்.

இந்த நிலையில், மன்னவனின் கூற்று தாய்ப் பறவையின் மீது கோபம் கொண்ட குஞ்சையொக்கும் என்று நகைத்து, போதவாதித்தன் மேலும் கூறலுற்றான்.

நகர் வலம் வரும்போது பத்ரகாளியைக் கண்டதும், பின் பாம்பை வென்றது முதலான நிகழ்ச்சிகளைக் கூற அவையினர் முன் சுண்டு விரல், உரகம், சோறு ஆகியவற்றை வைத்தனன்.

மேலும், கப்பம் என்று கூறியப் பெட்டியைக் கொண்டு வந்த காலிவிருத் தனையும் கூவி அழைத்து, அவனைப் பெட்டியைத் திறக்கும்படி கூற, அவன் பூட்டைத் திறக்க அதிலிருந்து அம்பு வெளிப்பட்டு மடிந்தனன்.

அவையில், இருந்தவர்கள் இதுகண்டு மனம் மகிழ்ந்தனர். போதவாதித்தனைப் புகழ்ந்தனர். புவிக்காவலனாகிய இராசனும் சிந்தை, களிகூர்ந்து போதவாதித்தனை நோக்கி 'நீயே எந்தன் குலதெய்வம்!' என்று கூறி அவனைத் தங்கச் சிவிகையில் அமர வைத்து அரசனே தம் தோளில் சுமந்து கொண்டு, இனி இந்த நகர் முழுவதையும் நீயே ஆட்சி செய்துகொண்டு எனக்கு அன்னம் மட்டும் அளிப்பாயாக என்றனன்.

எனவே, திருவேங்கட கூளம் பூபதியே! எந்தக் காரியமானாலும் ஆராய்ந்து பார்ப்பதுவே நியாயம் என்று பத்மினி போன்ற அக்கன்னி, கூறுகின்றாள்.

மேலும் கூளம் பூபதியை நோக்கி, 'நான் எந்தக் தவறும் செய்யவில்லை-ஒரு சூதறியேன்; மழுவேந்தி

ஊரெல்லாம் சுற்றி வந்து அதனை நிரூபிப்பேன்' என்று உரைக்கின்றாள்

தான் வாது செய்ததாகத் தன்னிடமே கும்மிப் பாட்டுரைத்து நாட்டு நடப்புகள் பலவற்றைத் தனக்கு எடுத்துக் கூறி ஆய்ந்து விசாரிப்பதே மெய்யாகும் என்க் கூறிய அவளை நோக்கி மகிழ்வுடன் சென்று அனைத்துக் கைப்பற்றி மன்மதனும் ரதியும் போலவும், வள்ளியும் வேலனும் போலவும் எந்நாளும் சுகமாய் இருந்தனர்.

இத்துடன் கும்மி முடிவடைந்து விடுகிறது. தன்னிடம்வாது செய்த கூளமபூபதியே தன்னை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்து விடுகின்றாள் அந்தப் பெண்.

'கூளம பூபதி' கும்மி என்னும் இச்சுவடியில் எதையும் தீர விசாரனை செய்யவேண்டும் என்ற நீதியே முழுக்க முழுக்க வலியுறுத்தப்படுகிறது. நீதி போதனையை வலியுறுத்த பஞ்சதந்திரக் கதைகள் கூறப்பட்டுவந்த காலநிலையையொட்டி இங்கும் சிலகதைகள் கூறப்படுகின்றன.

இனி, இதனைச் 'செவியறிவுறூஉ' என்னும் துறையின் பாற்படுத்தலாம். அரசன்நீதி வழுவுகின்ற போது இடித்துரைப்பது, அறவழிப் படுத்துவது இதன் இயல்பு. இங்கும் நீதி விசாரனை எந்த வகையில் இருக்கு வேண்டும் என்பது பேசப்படுகிறது.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது முதுமொழி. மேலும் 'பொருண்மேற் செல்லல்' என்பது

தமிழ் மரபு. இலக்கியங்களில் தலைவியை வரைந்துகோடற் பொருட்டுத் தலைவன் பொருண்மேற் செல்லலைப் பரக்கக் காணலாம். இங்கு போதவாதித்தன் முதலான நால்வரும், தந்தையிடம் செல்வம் மிக்கிருந்தாலும், உலக அறிவு பெறுதற் பொருட்டும், பொருள் கொணர்ந்தற் பொருட்டும் புறப்பட்டுச் செல்கின்றமையைக் காணலாம்.

பண்டைக் காலத்தே அரசனுக்கு அடுத்த நிலையில் அல்லது அவனுக்கு இணையாக-மதிக்கப் படுவனாக போற்றப்பட்டவர் ராசகுரு ஆவார். காலப் போக்கில் படைத்தலைவர்கள் அரசனுக்கு அடுத்த படியாக விளங்கத் தொடங்கினர்.

எடுத்துக் காட்டாக, பரஞ்சோதியையும், கருணாகரத் தொண்டைமானையும் கூறலாம். கலிங்கத்துப் பரணி முழுக்க முழுக்க கருணாகரத் தொண்டைமானுக்காவே பாடப்பட்டதை இங்கு நினைவு கூர்தல் வேண்டும். இது தொடர்ந்து அமைச்சர்களே முக்கிய இடம்வகிக்கத் தொடங்கினர் எனலாம்.

இங்கும் போதவாதித்தன் முதலான அமைச்சர் பெருமக்களின் நுண்மான் துழைபுலன் பெரிதும் பேசப்படுகிறது. இச்செய்தியை-நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கும் போது, கூளம பூபதியிடம் அமைச்சராக இருந்தவர்கள் மிகவும் புத்திக்கூர்மையுடைவர்களாக இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. இல்லாவிடில் அமைச்சர்களுக்குப் புகழ் சேர்க்கும் அளவுக்கு இதில் அவர்தம் பெருமை பேசப்படாடதல்லவா?

இந்நூலில் மதுரை, விசயநகரம், மயிலாபுரி, மகேந்திர மண்டலம் ஆகிய ஊர்ப் பெயர்களும் குறிப்பிடப் படுக்கின்றன.

மொழியமைப்பு என்பதை எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் ஒன்றன் பரியாயச் சொற்கள் இங்கு மிகுந்து கிடப்பதைக் காணலாம். சான்றாக நாய், கிளி கீரி முதலானவற்றிற்குப் பல பெயர்கள் கூறப்படுவதைச் சுட்டிக் காட்டலாம்.

நம்பிக்கைகள் சமுதாயத்தில் பல வகைப்பட்டன. அவற்றுள் ஒன்று-கீரிப்பிள்ளையை வளர்த்தால் குழந்தை பிறக்கும் என்பது. இந்த நம்பிக்கையும் இங்கு கதையொன்றின் மூலம் கூறப்படுகிறது. கீரிப்பிள்ளையை வளர்த்தவளுக்குப் பிள்ளை ஒன்று பிறந்த கதையும் விவரிக்கப்படுகிறது.

கூளமபூபதி இங்கு திருமாலின் அவதாரமாகப் பேசப்படுகிறார். 'திருவுடைய மன்னரைக் காணேன் திருமாலைக் கண்டேன்' என்று பழமொழியன்றோ? அதன் காரணமாக கூளம பூபதி ராமாவுதாரமகீபன் என்றும், செயமாதவன் என்றும் பேசப்படுகின்றான்.

எனினும் கும்மியைப் பாடியவன் சைவன் அல்லவா? அதனையும் புலப்படுத்தி விடுகின்றான். அவன் இறுதியில் ஒன்றுகூடும் கூளமபூபதியும், வாது செய்ததாகக் கூறிய மங்கையும் ஒன்றுபடும் போது, அவர்கள் வள்ளியும் வேலனும் போலவும், மன்மதனும் ரதியும் போலவும் விளங்கினார்கள் என்று பாடுகின்றான்.

அவனுடைய பாட்டுத்திறம் கேட்டுப் பரவச மடையத் தக்கதன்றோ?

## கூளம பூபதி கும்மி

சீற்கொண்ட பெஞ்சை நகற்க்கதிபன்
திருவேங்கிட கூளம் பூபதிமேல்
பாற்கொண்ட கும்மித் தமிள்
பாடச் சத்திபாலன் வினாயகன் காப்ப(ா)மே
ஒன்பதூற் வேந்தன் மகறாசன் நல்ல
உத்தமன் காமய்ய பாலகன்மேல்
இன்பமாய்க் கும்மித் தமிள்ப்பாட
முதலீசுரன் மாலயன் காப்பாமே
மேதினி போற்று மகராசன்
திருவேங்கட கூளம பூபதிமேல்
காதலில்க் கும்மித் தமிள்ப்பாட சத்தி
காவல னங்களாம்மன் காப்பாமே
நன்னிலைக் கோட்டைக் கதிபதியா
மதனாந்திரு வேங்கிட பூபதிமேல்
கன்னித் தமிள்க்கும்மிப் பாட்டுறைக்குச் செந்தூற்
கந்தசுவாமியும் காப்பாமே
காதலில்ச் செறந்த பதுமினி போலொரு
கன்னிமோகன வஞ்சி தன்மேல்
வாது செய் தார்திருவேங் கிடவேளென்று
வந்து முன்னின்று மொளியலுற்றாள்
ஆதியினூலுறை பொய்த்தாலு மதி
ஆதவன் நாளிகை யேய்த்தாலும்
மேதினி நீதி வழுவாத திரு
வேங்கிட கூளம் பூபதியே
போதினைச் சொல்லுங்கள் பொய்யாகுமதி
போத விசாரனை மெய்யாகும்
மேதினி தன்னில் நடந்ததை யொன்று
விண்டு சொல்லுரேன் கேளுமய்யா 1.

மாமது றாபுரி யென்றூறா மதில்
மன்னன் தென்னனென்றே பேறாம்
சாமபே தம்மென நாலும் பெரும்
சமஷ்த் தமிதானியென்றொரு மந்திரியாம்
மந்திரிக்கி பிள்ளை யில்லா
மல் வெள்ளிவாறம் ரெண்டுபோதுண்ணாமல்
சிந்தையி லெண்ணித் தொழுதேற்ற பின்பு
செல்வரும் நாலுபேற் தோன்றினரே
போதமிகுந்த கடல்போலே நல்ல
போதவாதித்தனும் சந்திரனும்
சீதரன் போலே வியாகறன் வீடணன்
சித்திரமென்ன வளந்தாரே
ஆண்டு பனிரெண்டுக் குள்ளாகத்
தமிளாய்ந்து தெளிந்தொரு நால்வருமே
வேண்டியே தந்தையைத் தாள்பணிந்தேயொரு
விண்ணப்பங் கேள்க்கத் துணிந்தாரே
அய்யனே நாங்கள் சென்றே புவியில்
மகுடாதிபற் பக்கத் திருந்து கனஞ்
செய்யுந் திரவியத் தேடிவருகவே
செப்புமென் றெப்பா வாய்மொளிந்தார்
பாலர்சொல்க் கேட்டுக் பிதாமொளிவானிந்தப்
பாக்கிய மெ மேலிருக்கையிலே
தாலமதில்ச் சென்று தேடும்பொருளது
தான் பெரிதோவென்றுரைக்க லூற்றான் 2.

அல்லக்கேளீன்றருள தந்தையரே பொருள்
ஆடகமே ரென்றிருந் தாலும்
சொல்லுக்கு வளனாவன் சொன்னதைத் தேடியேத்
தெரிய்ந்து வாறோ மென்றே பணிந்தார்
தந்தை மகிள்ந்து விட கொடுக்கச்சென்று
தானடந்தார்கொடி தான் விடுக்க
முந்தி ஜங்காதம் நடந்துசென்றே கையில்,
முன்னுக்கொரு தடங்கண்டாரே
முன்னவன் கூறின தொட்டகமொன்று
முடத்துடன் சென்றதைப் பாருமென்றான்

பின்னவன் சூலென்றுறைக்க வொருதனும்
பெற்றதின் வால்க் கூளை யென்றானே
பாகுவை யொன்றினில் சோதியிலா தென்று
பாங்காயொருவ னுறைக்கயிலே
ஆரென்று வந்தானே ஒட்டகந்தேடி
அலுத்தவன் சம்பு நிழலிருந்து
என்னமொளி சொன்னீ றாடவரேயிங்கே
யேகினி ஒட்டகங் யெங்கே யென்றான்
சொன்னது பாதக்குறிப்பி னாலல்லது
சுத்தமாயொட்டகங் காணோ மென்றாற்
காணமென் நீற்அடையாளஞ் சொன்னீ ரென்ன
காரணம் நீங்கள் கடத்தினதாய்
தோணுது அத்திரி ஒப்பிவித்தா லல்லால்
சும்மாவிட னென்றுறைத் தானே 3.

சல்லியஞ் செய்து வளக்காயித்
தானழகாபுரி றாசனிடம்
செல்லவும் வேந்தன் இருவகைப் பேற்மொளி
தீறக்க விசாரணை செய்தானே
வாருங்கள் மந்திர நால்வற்களே சோல
வனத்தினிலொட்டகங் காணாட்டால்
சேரு மடையாளஞ் சொன்னவித மதை
செப்புமென்றன்செய றாசனுமே
மாமனும் நீதம்வளுவாத செய
மன்னவர சொன்னவி தங்கேளும்
போமதின் சாயல் ஒருபக்க மானதால்
பொட்டையென்றோம் ஒத்தைத்திஷ்டியென்றாற்
ஒட்டகக் சென்றத டம்பாற்கநிலத்
தூனுதலாய்ப் பதிந் துற்றதினால்
திட்டமாய்ச் சூல்க் கொண்டி ருக்குமென்றே
சொன்னசேதிதா னென்று ரைத்தான்
நாலுபதம் பெருந்தாறையிலோர் பதம்
நாட்டினதாறை லெகுவாக
மேலுறத் தாங்கலத் தடமெனக் கண்டதால்
விண்டுறைந்தோ முடமென்றதையே 4.

ஓடின தொட்டகம் பின்தடப் பட்டதின்
ஓரத்திலே இரு பக்கமுமாய்
சாடையா ரேத்தம் விழுந்துறைந் துற்றதால்
தாலவட்டங்கூளை யென்றோ மென்றாற்
நாலுபேற் சொன்ன மொளிகேட்டு
மகா றாசாதிராசன் மனமகிழ்ந்து
சீலமுட னொட்டகத்துக் குடையவன்
செப்பு லிஷ்தந் தனுப்பினானே
மந்திர மார்களைத் தானம்பாத்து
மகாறாசாதி றாசனு மேதுரைப்பான்
சிந்தையாய் நம்மிடங் காத்திருந்தால் நீங்கள்
செய்யசம்பளம் தாறோமென்றான்
மாதமொன் றுச்குச்பொன் ஆரை
மாயிங்கேவந்தநால் வற்குந் தந்தாக்கால்
சீதரனே சந்தன வாசல்மந்திரி சேவுகஞ்
செய்வ மென்றே யுறைத்தார்
காவலன் கேட்டு மனமகிள்ந்தேநிசிக்
காலஞ் சாமங்கள் நாலுக்குமே
சேவுக னொன்றுக்குச் சாமமொன்றாய் நிதம்
திட்டமதாய்த் தாருமென்றே யுரைத்தான் 5.

அன்றுமுத லிந்த நால்வறுமே
மகுடாதிபன் சொன்னமு றைப்படியே
சென்று நன்றாயொருச்சாம மொருதராய்
தீறக்கமாய்க் கார்க்கின்ற
முன்னவன் சென்றுஒரு னாளில்ங்கே
முந்தினசாம முழுவதுக்கும்
அன்னகற் சுத்தி வரும்போது
வடக்காகப்பெண்ணொன் றழுகலுற்றாள்
ஆரண வாறி அதிரூபன் மகிளானந்தப்
போதவா தித்தனுந்தான்
காரண மாயிந்த வேளையிலே நடுக்
காட்டிலழுவதைக் காண்ப மென்றே
சீக்கிரத்தில்ச் சென்று பாக்கையிலே
யொருதேவிபத்திர காளியம்மன்

யேக்கமதாய் மிகவாய் விட்டழுவதை
யெண்ணிக்கண்டான் அமைச்சனுமே
ஆரடி தாயோ தேவிநீயும்
ஆங்கரமாயழுதேன்ங் கிரது
வூருறுக்க மரு வருவதுண்டோ சொல்லுத்
தமியேயென்றடி பணிந்தான் 6.

பத்திர காளியுங் கண்துண்டைத்தே
பதம்பணிந்தவன்றனைத் தானெளுப்பி
இத்திர மாயென்னை கேள்க்கவும்
வல்லய மற்றவன்நீயு மாரென்றாளே
தாயேகெவுரி திரிசூலி யிந்தற்
தாரணிமன்னவன் தன்னிடத்தில்
ஆயது சொல்லிய மந்திரிநா னடியம்பா
சொல்லென்றடி பணிந்தான்
சொல்லுவேன் தீவினை வெல்லுவயோ வேந்தைச்
சூளுந்துன்பத்தைத் தள்ளுவயோ
அல்லும் பகலிமை யாடாத நாட்டமு
மாகநின்றுநீ காற்ப்பாயோ
காற்பது நீயொன்று கண்டாயே யிந்தக்
காசினியில் புகள் கொண்டாயே
யேற்பதுக்கே மனமுண்டானால் வருமிடுக்கஞ்
சொல்லுரே னென்றுறைத்தார்
காளி சொலக் கேட்டு அமைச்சனு மெத்தக்
கலக்கமதாக யெளுந்து நின்று
ஊழிவிதியோ வென்றெண்ணித் துணுக்குட்
டுறைப்பான் பத்திர காளிமுன்னே 7.

கங்காளி சாமுண்டி மாகளி
யாழிக்கைபெற்காளி கனகாளி
சிங்கரி நீலி கெவுமாரி வனதேவி
யெனைப் பெற்ற மாதாவே
அன்னையே யென்னாலே ஆவதுண்டோ வரும்
ஆபத்தைக் கார்பது நின்செயலே

சொன்னவி பத்துக்க ளாறுக்குத் தீவினை
சூள்வது யெவ்விதஞ் சொல்லுமென்றான்
போதவிஷத் தாறனே யென்குளந்தா யிந்தப்
பூமியை யாளும்பு நலவற்கு
பேதமாக ஒருநாளிலே வந்து யிடிக்குதே
மூன்று தீ வினையே
ஆதித்த வாறம்வி டிவேளை யெதிறாளி
விடுக்கின்ற பொட்டியொன்றில்
சூதுசெய் தெவரும் றாசனைபொட்டிது றக்க
வொண் ணாதென்று காருமென்றாள்
அன்றைக் கிறவினில் றாசனருந்தும்
அமுதினில் மூணுபடி சோத்தில்
சென்றுது ஆட்ட விடமதை நீக்கியே
செம்மையாய்க் காருமென்றே யுரைத்தாள். 8.

அப்பவே றாசனுந் தேவியுந் தூங்கு
மஞ்சனையில் நித்திரை செய்யடவிலே
சற்பமொன் றேகுது றாசனைத் தீண்டவுந்
சங்கிலி தனவளி கண்டாயே
ஆகவேதீவினை மூன்றைவி லக்கினால்
அச்சமொன் றில்லை அரசருக்கு
பேகனே நீசென்று தற்காத்துக் கோவெனப்
பேசினாள் பத்திரகாளியுமே
மாலுக்கி ளையகவுமாரி செயமாதங்கி
மாலினி வேதாளி
சூலிமுக் கண்ணிவெங் கூளிக்கொடி கொண்ட
சூரியேகேசரி வாதினியே
யேளைபங்காளி யென்னம் மணிநீயு
வந்தெந்தன்முன்னின்று உதவிசெய்தே
நாளைக்கு றாசனைக் காற்பது நின்கடன்
நல்வாக்குச் சொல்லென வேபணிந்தான்
போதவா தித்தனே யென்குளந்தா யிந்தப்
பூமனுக் கேவரும் வில்வினையை
நீதியினாலே விலக்குவை நானுமுன்
னின்றுகார்ப்பேனென் றேயுறைத்தாள் 9.

மந்திரி போற்றியெ ளுந்திரிந்தே செய
மாலினி நின்ம்பதந் தஞ்ச மென்றே
சிந்தையி லெண்ணி நகர்க்கேகிச்
சமசென்னியும் நாட்டமும் சித்தமுற்றான்
பாளித மென்று பருகாமலுயிற்
பாங்கனுக்கேயெதிர் கூறாமல்
நாளிகைச் செல்ல நினவாகச் கண்டு
ராகுவேளைக்கிமுன் னேயெளுந்தான்
அப்பொளு தேசென்று ராசனைக் கண்டு
அடிபணிந்தேநிற்கும் வேளையிலே
செப்பமதாய் மச்ச தேசத்திருந்தொரு
சித்திரப் பொட்டி குணற்ந்தனரே
யேதிந்தப் பொட்டி யெனவேந்தன் மனதின்
பமாய்க்கேள்க்கவும் வந்தவர்கள்
காதலனே மச்சறாசன் விடுக்கின்ற
கப்பமென்றே சொல்லி கை தொழுதார்
பூபனுஞ் சிந்தைக ளிகூர்ந்துப் பொட்டிப்
பூட்டைத் தொரக்க நினைக்கையிலே
காபகமாய் நின்ற மந்திரபொட்டியை
கையியி லெடுத்துமொ ழியலுற்றான் 10.

நாடாளு மன்னற் தொளுங்கோவே
யிப்பறாகு வேளையிலேதுக்க
கூடாது பந்தனஞ் செயிதுபின் பார்க்கவுங்
கூடுமென்றே அயல்க் கைக்கெடுத்தான்
அண்ணலுஞ் சித்தம கிள்ந்தெளுந் தே
அனுஷட்டானவந்தினை செயிதுகொண்டு
உண்ண வமுதுகொணர்கவென்றானமு
தூற்றினராடகத் தாலத்திலே
மன்னவன் கையிகொண் டளைந்தெடுக்க நின்ற
மந்திர கூண்ட கைய்யால் விரித்து
அன்னமெ மல்கொரு மூன்றுபிடி தந்தருந்த
வேண்டுமெ ன்றேயுரைத்தான்
வேந்தனுஞ் சித்தங்க ளிகூற்ந்து பிடி
வேண்டினபோனக மும்மடியாய்

தாந்தவ மச்சனுக் கீய்ந்தை வாங்கியே
தன்முந்தியில் கட்டிக் கொண்டானே
கட்டிக் கொண் டேகிவெளியில்வந்துறாசன்
காதலியோ யில்கின்ற வேளையில்த்தான் சென்ற
சட்டகங் கொண்டுது யிங்கின்ற
வேளையில்த் தான் சென்ற 11.

வச்சிர வாளையு ருவிக்கொண்டு தூங்கு
மஞ்சத்தின் வல்லியில் நாட்டமதாய்
யெச்சரிக் கைக்கொரு தாணுவின் தோற்றமாய்
யேகமனங் கொண்டு நின்றானே
வல்லி வளியினி லேயுரகஞ்சீறி
வாரதைக் கண்டுது ணைவனுமே
தோலடியில் னேறியன ஒப்பென வீசுவுந்
துண்டு ரெண்டாச்சுது கச்வெவியே
சத்தப் படாமலுங் கைச்சித்திர
மதாய்தானேபாம்மைச் செயித்ததிலே
சுத்திய வாளுண்ட ரெத்தத்துளி
புந்துரைச்சிய்யொதற துறந்துவே
மந்திரி கண்டுது யறமுற்று யிருந்தவல்
வினைத்தீதது மனந்தோற
நிந்தினைச் சொள்லொன்று வந்துதென் றெண்ணியே
நிட்செயமுற்றுச் துணிந்தானே
சுண்டுவிரலணி கந்தன்னாலே மங்கை
சொறக்கத்தில் விளைந்த குரிதியைத்தான்
சுண்டியெடுத் தந்தச் சுண்டுவிரல்த்
தரித்தறவத்துடன் தள்ளினனே 12.

ஆரென்று மங்கைத் திடுக்கெட்டெளுந்தேவ
னாரென்று கேள்க்கவ மச்சனுமே
தூர்கொண்டே போதவா தித்தனுமனாளெறு
சொல்லியவன் மனைக் கேகினனே
மன்னவன் தேவிமி கச்சீறி
மணவாளனைத்தட்டி யெழுப்பி
ஒன்னுட மந்திரி மூத்தவன் தான்செய்த

லூக்கமதைப் பாரும் யென்றுறைத்தாள்
நித்திரை செய்யயிலே அவன் தன்னுட
நிகத்தினால் யெந்தன் கொங்கையைத்தான்
நத்திச் சொரண்டிச் சகிக்குனை செய்து
நடந்துவிட்டான் பேருஞ் சொல்லிக்கொண்டே
யென்றனள் விம்மிமன துருகிமிக யேங்கி
யேங்கிக் கண் ணீற்சொரிய
நன்று நன்றிந்தவ மச்சனைத்தேடி
நீர்ஞாயஞாயமென் றேயுரைத்தாள்
அப்பொழுதே போத சந்திரனந்த
அளகை நகற்சுத்திப் பாற்த்துக் கொண்டு
யெப்பொழு தும்போலே றாசன்மனையில்ச்
சென்றேகவும் ஆரென்று கேட்டானே 13.

பூபதி யேமகு டாதிபனே நானும்
போதசந்திர னென்றுறைக்க
கோபமுற் றேமக றாசதிறாசனுங்
கூருகின்றானொரு மாற்றமே
உன்தமை யன்போத வாதித்தன்வந்து நாம்
உறங்கு வேளையென் தேவியைத்தான்
நிந்தனை யாகச்சு கிக்கினைசெய்து
நின்றேகினன் நீதாமோ வென்றுரைத் தான்
மந்திர யும்றாசன் சொன்னமொளி வடவைக்கனல்
சூழ்ந்த தொப்பாய் நடுங்கி
முந்தையுள் ளோற்செய்த தீவினை வந்திப்ப
மூண்டுதென்றெண்ணியு றைக்கவுற்றான்
வேந்தற்கு காதுவிளியாகுந்தமிள்
விஞ்சையற்கேநெஞ்சு காதாகும்
தாந்த கயவற்குக் கைசெவியாகுமித்
தரளவுசெய்யானேன் தமையனுமே
நீதியினாலேவி சாரதணை செய்வதே
நிச்செயமற்றது பொய்யாகும்
ஆதியில்க் கண்டவற் சொன்னகதை யொன்ற
தினய்யன்கேழு மென்றே யுரைத்தான். 14.
பாரில்வி சையநகற மென்றே யொரு

பட்டண மன்னன் மதியாழி
காரியக் காரனுஞ் சக்கர யுத்தியுங்
காசினியாண்டு வருகையிலே
பூசுர னாம்வாசு தேவனுக்கே யொரு
புத்திரனன்றி வருத்தமுற்று
தேசிகம் போலொரு தத்தைத னைவைத்து
திவ்வியமாக வளத்தானே
வன்னிக்கிப் பேச்சுசைவ ருத்திநன்றாய்
மனையாளுந்தானும்கி ளாட்சியுற்று
நன்னய மானகுழந்தையொப் பாகவே
நத்திவளக்கின்ற நாளையிலே
சோலைக்கிளிய ளினங்கூடி விண்ணிலத்
தோய்ந்துபறந்து சென் றேகக்கண்டு
சாலைப் பிறமன்வ ளற்த்தசுகமது தன்னினஞ்
சென்றதைக் கூவியதே
கூவிமொ ளியுமென் பந்துக்களே நீங்கள்
கும்புடன்சென்ற தெவடத்துக்கு
ஓவிய மேதேனு முண்டால் நானும்
ஒக்கவாறேனென் றேயுறைக்க 15.

பந்துகள் கேட்டுமே தான்மொளியும் வட
பாரிசஞ்சந்திரகிரிச் சாற்பிலே
கந்துகம் போலவுஞ் சூதக கனியுண்டு
காரணமான கனியதுவே
மானிடற் செல்லவுங் கூடாது
மற்றவண்டக கருப்புகள் நாடாது
தேனழி மாவொன்றுந் தேடாது தபஞ்
செய்யு முனிவர்கள் சூள்வனமே
ஆண்டு நூற்சென்ற வறுண்டாலும்
பதினாறுவயதுள்ள வாலியமாய்
பாண்டெனு மோதி கருப்பேரிச் சிறு
பாலகன்போலமேனி பாலிக்குமே
யென்னவே கிள்ளையினங்கள் சொல்ல
மறையிறைவன்வன்னியுந் தான்கேட்டு
தன்னை வளக்கின்ற வேதியன்

தன்னிடஞ்சார்ந்துசேதி யுறைத்ததுவே
இப்படிச் கொற்ற கனிதனை நானுஞ்
சென்றெடுத்து வாறேனென் றேயுறைக்க
அப்படியே சென்று கொண்டுவறுக
வென்றனுப்பச்சென்றது கிள்ளையுமே 16.

கிள்ளையுஞ் சென்று யினத்தோடே யந்தக்
கிறியிலுற்ற கனிக்கேகி
பிள்ளையென்றே வளத்தோனுக் கொருகனி
பிடிங்கிக் கொண்டு பின்னேகியதே
கொண்டுவந் தேசுகஞ் சூதக கனிதனைக்
கோலமரையவன் கைக்கொடுக்கக்
கண்டதை வாங்கு நிலத்தினி லூணியே
காதலுடன் பயிற்செய் தானே
மாமற மீறி வளர்ந் தோங்கிமிக
மாமலனும் பிஞ்சுங் காய்சொரிய
நாமறையோனு மனமகிள்ந்தே நிதம்
நன்றாய்க்காபந்து செய்தானே
முந்திப் பளுத்த கனியதுவே வெகு
முக்கியமாகவும் வேந்தறுக்கு
தந்து போசிக்கவும் வேண்டுமென் நந்தணன்
தானெண்ணிக் கொண்டு யிருக்கையிலே
மாதவ னேரிய வாகனஞ் சற்பத்தை
வாரியெடுத் திந்த மாமரத்தில்
கோதவுமே விடமுந்திப் பளுத்துற்ற
கொக்குக்கனியுதிறங்கள் சொறிந்தனவே 17.

மாமறை யோனதைக் காணுமலந்த
மாங்கனிதன்னையெ டுத்தேகு
பூமனுக் கீய்ந்து நடந்த விஷ்த்தரம்
புகன்றான்றாச நிடத்தினிலே
அண்ணலுங் கேட்டு அதிசெயித்து யிந்த
ஆச்சநியம்பாற்க வேணுமென்று
யெண்ணித் தனது குருக்கள் விருத்தனென்
றீய்ந்துபோசியு மென்றே யிறைத்தான்

ஆசானுஞ் சூதக கனியைப்போ சிக்கவே
அப்பவே சொபமுற்றே விளுந்து
பேசாம லீறல் பிடித்து அவத்தையும்
பெற்று யிறுவிட்டு அடங்கினதே
மன்னனுங் கண்டும னங்கலங்கி யிந்தமா
மரையோனைவ தைக்கவொண்ணா
யென்னவும் பச்சைக்கற்ப பூரத்தைக்
கண்ணிலேயிட்டுக்கட்டிமு டிக்கினளே
வேதிய னும்வழி தானிழந்தே மனமெத்தக்
கொதித்தந்த தத்தையைத் தான்
பாதகமாகக் களுத்தை ஒடித்தொரு
பாளுங்கிடங்கிலெ றிந்துவிட்டான். 18.

றாசனும் வேதியன் வச்ச மறந்தனை
நச்சுமறமென நிச்செயித்து
மோசம் வறுமெனச் சுத்திலு முள்ளுகள்
மூடியுங்காவல்ப் படுத்தினனே
அப்படிக் காவலி ருக்கின்றநாளையி லன்னகைற்
தன்னிலோற் செட்டிப்பெண்ணும்
ஒப்பர வில்லாத மாமியை பெத்தனு
பத்திறஞ்செய்துமு டிக்கிளளே
செட்டிக்கிவிமணம் வெருத்தே உயிற்ச்
சேதப்படுத்திக் கொள வேண்டி
கட்டுமட்டாகிய நச்சு மறந்தேடி
கங்குல்நடுநிசி வேளையிலே
சென்றாள் காவலுறங்கையிலே மெள்ளத்
தேடிஒருகனி தானெடுத்து
நன்றாய் தன்மகன் வாழ்கவென் றெண்ணியே
நாடியே அக்கனி உண்டாளே
சாப்பிட்ட போதந்தச் செட்டிக் கிளவியும்
தானேவாலிபப் பெண்ணாக
சீப்பிட்ட கூந்தலுங் கந்துகக் கொங்கையுந்
தீற்க்கமதா கவேநின்றாளே 19.

அன்னையைக் காேனா மென்றேமகனும்
மறாமகளுந்தேடியே அவ்விடத்தில்
முன்னுக்கிவள் நிறந்த தோணாமலிங்கே
மூத்தவிருத்தையைக் காணியென்றார்
விருத்தை வாலிபமானவள் தான்மிக
வெக்கமுற்றேமகனைப் பார்த்து
ஒருத்தரும் வரத்தான் காணேன் நானு
ஒருத்திதானுந்தன் அன்னையென்றாள்
தாயென்றுறைக்க மகன்கேட்டு யென்ன
சறப்பினைவாலிப்பபெண்ம் போலே
பேயொன்று வந்திங்கே யேய்க்குதென்றே
செட்டிபின்னிட்டு ஓட்டமெடுத்தனரே
ஓட்டமெடுக் கவுந்தாயும் பின்னே துடந்
தோடிவருவதைக் கண்டுசெட்டி
வாட்டமுற்றே மனையாளுடன் வீதியில்
வந்துவாய் விட்டளறினேனே
ஊரில்ச் சணங்கள் மிகக்கூடி நந்துற்றதை
கேட்டிந்தச் செட்டிபெண்ணை
கோறி நீவந்த வகையேது யிந்தக்
கோலமுமே தென்றுறைக்க லுற்றாள். 20.

வாலிப்பப் பெண்ணு மொழியலுற்றாள்
மருமகளும் நானுமே வாதுசெயிதே
காலவிடமெனும் நச்சுக்கனி யுண்டு
காயத்தைப்போக்கவென் றேகினனே
மாங்கனி யொன்றை யெடுத்தருந்த யிந்த
வாலிபம் வந்துதென் றேயுறைத்தாள்
ஆங்கதைக் கேட்டு அதிசெயமாக
அரசற்குசென்றுயுரைத் தனரே
கொற்றவன் கேட்டுமே யோசினையாயொரு
கொக்குக்கனியைக் கொணறக்வென்று
மற்றும் வடத்திலுற்ற விருந்தனை வாங்கிப்
போசியுமென்றே யுரைத்தான்
விருத்தனு மபயமுற்றே போசிக்க மத
வேளுக்கிணைந்தவடிவு பெற்று

திருத்தம தாகிய வாலிபம் பெற்றதை
சீமானுங்கண்டு மங்கேதுரைப்பான்
முந்தவே வேதியின் தந்தகனியதில்
முன்வினைசெறந்து இருந்ததுவோ
யெந்தனைச் சூளவென்றே வந்த பாவ மன்றே
கினதோவென்று யேங்கினனே. 21.

வேதியின் தன்னை வறவளைத்து ஒன்னை
வீணில் அனீத விசாரணையாய்ச்
சோதியைப் போக்கினன் யென்னைப்பழவினை
சூள்ந்ததினாலென்று ரைத்துச் சொல்வான்
இந்த நகறதனில் பேறுபாதி யுனக்கென்றென்று
மென்னவே தாறை விட்டு
தந்துமே றாசனுங் காசியின் யாத்திரை
தான்சென்று அப்பொழு தேகினனே
பூசுரன் தத்தையைத் தானினைத்தே மனம்
பொங்கிக் கலங்கியே யேக்கமுற்று
பாசங் கலந்துற்ற சித்தமுமாகப்
பயித்தியங்கொண்டு மடிந்தானே
நாடெங்கும் றாசன் அனீதஞ்செய்தா னென
நன்றாய்க் கீற்த்தி யொன்றேநிலைக்கத்
தேடினனாகையி னாலொரு காறியம்
தீற்க்கவிசாரிச்சுச் செப்புமென்றே
யேகினனே போதசந்திரன் பின்னு
மிளையவன்போத வியாகறனும்
வேகமதாய் நகற்சுத்திக் கொண்டேபுவி
வேந்தன் அறமனைக் குற்றானே 22.

றாசனுங் கண்டு வியாகறனே ஒருஞாயஞ்
செய்தானுள் தமையன் வந்து
நேசமதான யென்காதலி கொங்கையை
நீக்கிநிகத்தைப் பதித்துச் சென்றான்.
சம்மதியா லெனக்கென் நுரைக்க நல்ல
சற்க்குணன்போத வியாகரனும்
இம்மையிலிம் மொளிதான் கேள்க்க

அயனிட்டவிதிப்படியென் நுறைப்பான்
அஞ்சாமை யீகையரிலுக்க மிந்த
ஆகவே நாலுமரசருக்கு
யெஞ்சாமையல்லது பேரதினை கேள்க்கவும்
யேற்க்காது யேற்க்காதென் றேயுறைப்பான்
பூமியிலே மயிலாபுரி யென்றொரு
போடவிராசனும் போசனுமாம்
சேமநென் றேயொரு மந்திரியுங் கூடி
தேசத்தை யாண்டு வருகையிலே
அன்னகர் தன்னிலொரு வேடன் திருவம்
பலவன் பிள்ளை யில்லாமலே
சின்ன முடுவலின் குட்டியொன்றை நன்றாய்ச்
செப்பமதாக வளத்தானே 23.

பாசியின் குட்டி பறுசாகி மனுப்
பாவகம்போல அறிவுபெற்றே
சூசனையாக வேவேட்டையாளாடிச்
சுகத்திலிருக்கின்ற நாளையிலே
வேடனை மெத்தக் கடங் காரற்செய்த
வேதினைக்காகவும் மசாளிதனை
நாடி அளைத்துப்போய்ச் செட்டிதன்மயால் வைத்து
நானுறுபொன்கடன் வாங்கினனே
செட்டி முடுவலைத்தான் பாத்து நானுஞ்
சென்றுகடலோட்டக் கப்பலிலே
பட்டணஞ் சுத்தியேதான் வறுவேன்வீடு
பத்திரங்காத்திரு வென்றுரைத்தே
புத்தியுஞ் சொல்லி வசியென்னுத் செல்லப்
புறோகதி அன்று முதலாக
நத்தியும் வீடுவிட்டப்புறம் போகாமல்
நன்றாய்க் கார்க்கின்ற நாளையிலே
கள்ளனைப் போலவறுஞ் சோறகன்தன் மனைக்
காதலன் ளேலேவந்து படுத்து
வெள்ளனைப் போலே விடிந்தபின்னேகும்
விஷ்த்தாரமும் கண்டுதுபாசியுமே 24.

சீரிமிகச் சினந்தே குலைத்தே பெண்ணைச்
சேறவறுகின்ற சோறர்களை
தூரமுடிக்கி விடுவதைக்கண்டு
துறத்தியடித்தனள் சூறனையே
சூரனு மெத்த வயிறுமுற்றே ஒருசோறனைச்
சென்று படுக்கையிலே
வீறமதாகவே கண்டந் துண்டாக்கியே
விட்டுது வேடன் முடுவலுமே
செட்டிப்பெண் மெத்த நடுநடுங்கி வீட்டில்ச்
செத்தபிணத்தையுங் கொல்லயிலே
வெட்டிப் புதைத்தந்தக் குக்கலுக் கன்னமிடாமல்
விரட்டி அடித்தனளே
சூரனுமந்தனகரில் கறத்தில் தோய்ந்துண்
டெரிந்தயிலைச் சோத்தை
சேறுமினத்துடன் கூடிப்பொசித்துப்பின்
செட்டி மனைதனைக் கார்க்கின்றதே
யிப்படிக்கே வரும்நாலையிலே செட்டியேகியே
பட்டணஞ் சுத்திக் கொண்டு
தாயாரு திங்களுஞ் சென்றுத்
திரும்பிவருதே மனைசேற்ந்தனனே. 25.

வந்தவணி கனைக்கண்டு குக்கல்மிக
வாலைஅசைத்து மின்கால் வளைத்து
குந்தியெளுந்து பின்கயிதனை மோந்து
கூத்தாடி வூளைக்குரல் விட்டதே
கொஞ்சின ஞாளியை செட்டிகண்டே
களிகூர்ந்து செங்கையினாலத் தடவி
வஞ்சகஞ் சொல்லவே கொல்லையிலோடி
விடும் மண்ணைப் பரித்திடும் வாயலிடுமே
யேதிந்தக் கோலமென்றே வசியன் சொல்லைக்
கேகிய குக்கல்ப் பரித்திடாததை
கோதியே தோண்டப் பிணத்தைக்
கண்டேசெட்டி கூக்குறலிட்டனனங் கூடினறே
கூடின பேரிவன் சோரகனென்னக்
குரிப்புடன் கண்டந்தச் செட்டிப்பெண்ணை

நாடியே கேள்க்கவு முள்ளதைச் சொல்லப்
பின்றாசனிடத் திலுறைத்தனரே
காவலன் கேட்டந்தப் பெண்ணைச் சுண்ணாம்புற்ற
காளையிலே வைத்து நீத்தியிட
ஆவலுடன் செட்டிநாயதனைக் கூவி
அணைத்து முத்தாடியுறைக்க லுற்றான். 26.

வேடனுனை வைத்து வாங்கின பொன்னது
வேண்டுவதில்லை யென்றே முரியை
நாடியெடுத்து களுத்திலிட்டே உந்தன்
நாயகன்பால் செல்லென்றே விடுத்தான்
குக்கலுஞ் சென்று நடுவளிக்கேக
குரிப்புடன் வேடன் முதலுங்கொண்டு
அக்கரையாக வறுகையில்க் குக்கலு
மங்கேவாரதைக் கண்டானை
கண்டவன் கோபமுற்றே மொளிவான்பெற்ற
கடனை கொண்டு வருக முன்னே
உண்டவீட்டுக்கு நீரெண்டகஞ் செய்துமே
ஒடிவந் தாயென்றே யுறைத்தே
கய்யலிருந்த அருவாலால் நாயின்
களுத்தை நோக்கியே ரெண்டுதுண்டாய்
உய்யவே வெட்டியெறிந்து விட்டேசெட்டிக்
குற்ற பணங் சென்றனனே
செட்டியும் வேடனைத்தான் பாத்துயென்ன
சேதியுன் பாசிதன் பால்முறியை
கட்டி அனுப்பி வரவிடுத்தே னெதிர்
கண்டதிலையோ வெனக் கேள்க 27.

வேடனு மய்யமுற்றே மலைத்து பொருள்
வேண்டிக்கொளாமல் முரிகொடுத்து
இடுடனேக விடுத்தவாரெதெனயின்ப
முற்றே செட்டி சொல்லலுற்றான்
ஒன்னுட சூரனுதவியைப் போலேயுதவுவெ
றோயெந்தன் பந்துகள் தான்
யின்ன விபறமென்றே வகைதோன

யெடுத்துரைத்தானந்தச் செட்டியுமே
அந்த விஷேஎமுந்தான் கேள்க்க
மதியன்றியேவேடனு மச்சணமே
சிந்தியுயிரை மடித்துவிட்டானுடன்
செட்டியுங்கூடி மடிந்தனனே
தூக்கிவினை செய்யவேணுமென்றே அவ்வை
சொன்னபழமொழி தானிருக்க
தீற்க்கமதாக விசாரித்த பின்பு
தெரியுமென்றே சொல்லித் தானடந்தான்
போத விபூஷணன் அட்சணம் வந்து
புரவலனைக்கண்டு கைதொளுத
பாதகனுன் தமையன் போதவாதித்தன்
பங்கசெய்தா னென்றுறைத்தானனே. 28.

றாசனுரைத்த மொளிகேட்டு அரிறாமா
றாமாவெனக் காதில்க் கய்யை
நேசமதாகவும் பொத்தியே வேந்தன்முன்
நின்றுறைப்பான் மதிவீடணனே
கொண்டல் பொருவுங் கறாதலனேபுவி
கொற்றவனை நீதிபெற்றவனே
கண்டதை ஐம்புல னொப்பி மனதுக்கு
காட்டிக்கொடுத்ததுவே நிசமா
நிச்செயங் கண்டுமொளி யாட்டால் வந்து
நேந்திடுமே பளிபாவங்களும்
பச்சமென் றெண்ணவுங் கூடாது
பாரில் நடக்கின்ற நீதமுமே
யெப்படி யென்னில் மயேந்திர மென்றொரு
யேற்றமண்டில மவ்வூற்கு
தப்புரையாச் சித்திர நூபனுமந்திரி
தானுந்தளசிங்க மென்றவனும்
காசினியாண்டு வறுகையிலே யொரு
காரிகை வாணிய மங்கையுமே
ஆசைய தாயொரு கீறியின்பிள்ளையை
அன்ம்பாய் வைத்து வளத்தானே 29.

காத்திரந் தன்னை வளத்த விஷேடமாய்
கன்னியுங் கெற்ப முன்டயிறுத்து
நெத்தியென்றே யொரு ஆண் பிள்ளைபெற்றுமே
நேர்மையதாக வளத்தாளே
சக்கிரி மங்கை பெருனாளில் த் தொட்டுதனில்
குளந்தையைத் தான் போட்டு
பக்கத்தில் கீரியைக் காவல் வைத்தே மங்கை
பாணிக்கிசாடி கொண்டேகினளே
காத்திரம் பாலனைப் பார்த்திருக்கும் போது
கச்செவி தொட்டு வளியாக
சீத்தென்று வாரதைக் கண்டிந்த கீறுயுஞ்
சென்றுகடித்துத் துண்டாக்கியதே
பாம்பைக் கடித்து மடிந்துவிட்டே அந்த
பாலகனைப் பெற்ற தாயிடத்தில்
தேம்பியே சொல்லவென் றோடிந்டுவளி
செல்லையில் மங்கையெதிர்ந்தனளே
மாதிந்தக் கீறிதின பாற்க்க
மிகவாயினில் ரத்தம் பொளிந்திறுக்க
யேந்திந்த ரத்தமும் தொட்டியிலப் பாலனை
யேறிக்கடித்ததன் றண்ணா முற்றே 30.

தண்ணீக் குடந்தனைக் கீறித்தலையினில்த்
தாங்கியே போட்டு நசிக்கிவிட்டு
கண்ணிலச் செலத்தைத் துடைத்துக் கொண்டோடியே
கன்னியுரந்தொட் டியைப் பாற்த்தாளே
தொட்டிலக்கு ளந்தியுந் தான்தூங்க
சற்பந்துண்டு துண்டானதும் தான்காணங்க
முட்டிக் கொண்டே கீறித்தன்னாலே வாணிய
முத்தி யுயிரை மடித்தாலே
வாணியப் பெண்ணு மடிந்தபின்பு
அவள்மைந்தனைப்பாலுள்ள மங்கைதபால்
பேணிக் கொள்ளென்று கொடுத்தந்த
வாணியன் பித்துபிடித்து மடிந்தானே
தீற்க விசாரணை செய்தாக் காலிந்தச்
சேதமும் வருது மகீபதியே

ஆற்கும் பொருமொளி யாகுமிதாமென
ஆங்கவன் தன்மனைக் கேனினனே
ஆம்பலெனுங் குரும்பே மிகமீறின
தாக்கமதைச்கண்டு தாமறையும்
வீம்பு கொண்டேகிச் சிறப்பதுபோல
விடிந்துகதிருந் றெழுந்ததுவே 31.

ஆதவன் வந்து உதித்த பின்பு
மகுடாதிபன்வந்தனை செய்துகொண்டு
போதவாதித் தனுந்தம்பியற் மற்றும் புகள்
புரிந்தோறை யளைத்தனறே
சங்கம் பெருக்கிக் கொலுமுகமாகவுத்
தாமேமேலேயிருந்து கொண்டு
அங்குற்ற பேற்களைத்தான் பாத்து
மகுடாதிபனேதந் குறைக்கவலுற்றான்.
மந்திரி போத வாதித்தனும் றாத்திரி
வந்தவன் செய்த விதத்தைநன்றாய்
இந்தச் சபையிலுள்ளோற் களனவறு
மின்பமாய்கேழு மென்றே யுறைத்தான்
அய்யனே போதவாதி னெயெ
தென்றவைத்துள்ளவந்தான் கேள்க்க
செய்யலுடனந்த வய்ய முற்றோறுக்குச்
செப்பலுற்றான் மதிமந்திரியே
வாறுதிக் கப்பறமோற் தீவாம்திடம்
மாதவறுற்ற வனமு மொன்றாம்
மீறுந் தறுவின்பணாறுகள் தாவியே
விண்ணுலகுக் கடுத்துற்றதுவாம்
பைந்தறா மீறுவேனந் தனிலோற்
தருபாரிதி போன்ற மறாமரத்தில் 32.

சிந்தையுற்றே யொரு பச்சிவந்தேயதில்
சித்திரம் போலகுடு செய்ததுவே
கூடுசெய்தே அதில்முட்டையிட்டே ரெண்டு
குஞ்சுபொரிக்கப் பறவைக்குஞ்சை
சாடிய பாம்பொன்று பச்சியிலா வேளைதான்

சென்றுகுஞ்சை முழுங்கினதுவே
யிப்படி மூன்று பொரிவுக்கும் குஞ்சை
யெடுத்துமுழுங்கிட பின்னு மதில்
ஒப்பிய பச்சியோற் முட்டையிட்டே குஞ்சு
ஒன்றுபொரித்து வளர்த்ததுவே
குஞ்சு பறவைக் கிடமாகி பக்கக்
கொப்பினில்த் தாவி உமுக்கார்
பொஞ்சின வேளையொரு னாளில்குஞ்சும்
புளகு மடையிலுரங்கியதே
கங்குல் விடிந்து வருகுதென்றே பச்சி
காதலிடன்யிறைக் கேகவென்று
தன்குஞ்சிந் தூங்க யெழுப்பிச் சொல்லாமலே
தான்சென்றுதீவுகள் கேகியதே
குஞ்சு முறங்கவிடிந்த பின்னே யொரு
குச்சிமுரிந்தந்தக் கூட்டில்விழ 33.

அஞ்சியே குஞ்சு முளிக்கவுந் தாயைக்
காணாமலுமே யெண்ணமுற்றதுவே
குச்சியினா லெநிந்தொச்சம் தாய்நம்மைக்
கூப்பிட்டுகொல்லன் கூடாதெனவே
இச்சையதாய்ச் சென்று தன்னையென்றே
மணத்தெண்ணியுங் கொம்பொன்று லேகியதே
கொம்பு விருக்கவுந் தீவினை மூன்று
குரித்துவருவதுந் தோனாமல்
வெம்பு மனத்துடன் பச்சியின்மேல்க்
கோபமெண்ணி இறுக்கின்ற வேளையிலே
வேடனொருவன் கடுதொடுத் தேகையில்
வில்லுடன் குஞ்சக்கண் டெய்யவென்றே
நாடிமரத் தடித்தன்னில் வந்தே நேறு
நன்றாய்ப் பார்த்துக் கொண்டேதிரிய
முந்தியே நாகமிக குஞ்சையுஞ் சென்று
முளுங்கவும் புத்திலிருந்தேக
அந்திரத்தே யொரு றாசாளிகுஞ்சை
அடிக்கவும் வட்ட மிட்டாடியதே
தீவினை மூன்றுமடுத்து வந்துற்றதை
சிந்தையில்த் தொணயிலாமல்க் குஞ்சு 34.

ஓவியம் போலவும் பச்சியின்மேல்க்
கோபமுள்ளமனத்துடன் உற்றதுவே
வேதன்விதி வலுவானதினால் குஞ்சு
வீத்திருக்கவந்த வேடனுமே
பாதகஞ் செய்ய அண்ணாந்து கொண்டேசுத்திப்
பாற்கையில்ப் பாம்பும் வெளியேற
காணாமல் வேடன்அறிவின் களுத்திலே
காலால் மிதிக்கக் கடித்துரகம்
பூணாரம் போலவும் காலினில்ச்சுத்த
பொறண்டு குதித்தனன் வேடனுமே
வேடன் குதிக்கவும் பாம்புதலையில்
மிதிபடமாண்டுது கச்செவியும்
ஆடின றாசாளிக்கே வேடரம்பு
சுருண்டுவிடச்சென் றுறுவினதே
றாசாளி பச்சியு மாண்டுது வேடனும்
நாகங்கடித்த விடத்தாலே
பேசாமல் மாண்டுவிட்டான் குஞ்சும் முன்மதி
பெற்றதுபோலக் கொம்பிலுற்றதுவே
பச்சி யெரையெடுத் தேகுவறக் குஞ்சு
பங்க மென்றெண்ணியே கோபமுற்ற 35.

உச்சிதம் போலவே மன்னவன்
கூறினதொக்கு மென்றே நகைத்தேயுறைப்பான்
பத்திர காளியைக் கண்ட முதலிந்தப்
பாம்பைச்செயித்த வரையளவும்
உத்திரஞ் சொல்லியே சுண்டுவிரலு
முறகமுஞ் சோறுஞ்சபையில் வைத்தான்
கப்பமென்ற பொட்டிதன்னைக் குணர்ந்தொறு
காலிவிருந்தன் தனைக்கூலி
செப்பதாய்க் துறவென்றனன் பூட்டைத்
திறக்க மடிந்தனன் அம்புபட்டே
கண்டனற்ச் சங்கம் புகள்ந்தற்றப் புவிக்
காவலன் சிந்தைகளி கூற்ந்து
விண்டனன் யெந்தன் குலதய்வம் நீயென்று
வேண்டியே தங்கச்சிவிகையிலே
மந்திறிதன்னையுந்தூக்கி வைத்தே செய

மன்னவன் தோள்க் கொண்டு தான் சிமந்து
இந்தநகற்முளுதுமே யாண்டு கொண்டெமக்கு
மன்னமருள் செய்யென்றான்
ஆகையினா லெந்தக்காரிய
மாகிலுமாய்து பாற்ப்பதுவே நிதம் 36.

வாகனே மன்மதனே திருவேங்கிட
மன்னவாம் பாற்றியென்றே பணிந்தே
விண்டு சொல்பவாலொறு சூதரியேனென்று
மேதினி மேய்க்க மளுவேந்தி
கொண்டு நின்றொப்பி விப்பேன் திறுவேங்கிட
கூளமனே புவிக் கொற்றவனே
மாமனும் நீதமனோகரனே செயமா
தவனேயெந்தன் காதலனே
பூமகள் மேவும் புயரசனே
பண்புகள் திறுவேங்கிட பூபதியே
நாவலற் போற்றிய நன்னிதியே
செயறாமாவுதறா மகீபதியே
காவலர் கப்பம்பெ ருநிதியே
காமய்ய வேளறுள் காதலனே
பணமலர் மாலை யணிதிரு வேங்கிட
பாக்கிய யோக தாயாநிதியே
சண்முகதாசன் தமிழ்க்குதவும் செய்ய
தாஷ்ட்டிக் வல்லக் கவார்குலேனே
யென்றுமே மங்கை தொழுதேற்ற
திருவேங்கிட கூளமன் இன்பமுற்று 37.

நன்று நன் றென்றுகைப் பற்றி யணைத்துமே
நாடியே பஞ்சணையில்
மன்மதனும் ரதிதான் போலும்
புனவள்ளியும் வேலனும் போலவுந்
நன்மையதா யணைந்தே சுகம் பெற்று
மென்னாளுந் சயயோக மாய்
ஒன்பதூர் வாழிசெயவாழி நல்ல
உற்றமன கூளமன வேள் வா[ழி]
யின்பம் மதீதாய்த் திருவேங்கிட கூளமன்
யென்றேன்றும் வாள்கவும் வாளிய 38.